விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (03.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# உலகை ஏமாற்றும் செயலே

# வடக்குத் தேர்தல் அறிவிப்பு

## சுரேஸ் எம்.பி குற்றச்சாட்டு

**வட. மாகாண சபைத் தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் நடத்தப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு உலகை ஏமாற்றும் செயலாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

கண்ணிவெடி, மீள்குடியேற்றம் ஆகிய வற்றைக் காரணம்காட்டி இதுவரை சர்வ தேசத்தை ஏமாற்றிவந்த அரசாங்கம் அடுத்த வருடம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி வட மாகாண சபைத் தேர்தலை நடத்தாது கால த்தை இழுத்தடிக்கலாம் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு கடந்த வாரம் விஜயம் செய்த இந்திய தேசிய பாது காப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் பொரு ளாதாரஅபிவிருத்தி (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவன் டெங்கிற்கு பலி

வடமராட்சியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவன் டெங்கு நோய்த் தாக்கத் துக்கு உள்ளாகி நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி அல்வாய் வீதி உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த தவபாலன் கிரிதரன் (வயது-23) என்ற கொழும்புப் பல்கலைக் கழக கணனி விஞ்ஞான 3ஆம் வருட மாண வனே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் கொழும்பில் இருந்து அண்மையில் தனது வீட்டிற்கு வந்தவேளை நோயுற்று கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அங்கு சிகிச்சை பல னின்றி டெங்கு நோயால் உயிரிழந்துள்ளார். (ந-3,24)

## தாக்குதலுக்கு உள்ளான கைதிகளின் உயிர் ஊசல்

### கூட்டமைப்புக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரி களால் கடுமையாக தாக்கப்பட்ட தமிழ் அரசி யல் கைதிகளில் ஒருவரின் நிலைமை கவலைக் கிடமாக இருப்பதாக தெரியவருகின்றது.


அநுராதபுரம் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட இக் கைதியைப் பார்வையிடு வதற்காக அநுராதபுரம் சென்ற கூட்டமைப் பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் ஆகியோ ருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளரின் அனுமதி யில்லாமல் தம்மால் அனுமதி வழங்க முடி யாது என அதிகாரிகள் கூறியுள்ளதாக நாடா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து அங்கு தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் அவசர அவசரமாக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

அவ்வாறு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை (20ஆம் பக்கம் பார்க்க)

## திருத் தேரில் அன்னையைக் காண நயினையில் நேற்று பக்தர் அலை



ஈழத்தில் பிரசித்திபெற்ற அம்மன் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று (20ஆம் பக்கம் பார்க்க)

## வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய அதிபர் நேற்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் புதிய அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் நேற்றுத் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபராக கடமையாற்றிவந்த திருமதி வேணுகா சண்முகரட்ணத்திற்கான இந்த நியமனத்தினை பொதுச்சேவை ஆணைக்குழு வழங்கி யிருந்தது.

இந்நிலையில் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபராக அவர் பதவியேற்றுக் கொண்டார். (ந-6)

## அரபு வங்கிகளிடம் இலங்கை கடன்


ஐ.நா.மனித உரிமைச் சபை விவகாரத் தில் அரபு நாடுகளில் புதிய உறவுளைக் தேடிய இலங்கை அரசாங்கம், தற்போது அரபு வங்கி களிடம் கையேந்தியுள்ளது.

அரசாங்கம் தனது வலுவரம்பினை மீறி, சர்வதேசத்திடம் இருந்து கடன்களை பெற்று தனது பொருளாதார நிலையினைத் தக்கவைத்து வருவதாக பொருளியல் நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் உரையாற்றிய மேடை சரிந்தது!

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் நேற்று பிற்பகல் பலத்த காற்று வீசியது. மட் டக்களப்பு பிள்ளையாரடியில் கிழக்குப் பல் கலைக்கழக சௌக்கிய சுகாதாரப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உரையாற் றிக் கொண்டிருந்தபோது கடும் காற்று வீசத் தொடங்கியதால் அமைச்சர் உடனடியாக மேடை யிலிருந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு குறித்து ஜப்பானுக்கு இலங்கை விபரிப்பு




கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவினால் செய்யப் பட்ட பரந்தளவிலான சிபாரிசுகள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை கள் குறித்து ஜப்பானிய அரசாங்கத்திற்கு நேற்று இலங்கை விபரித்துள்ளது.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜப்பானிய பிரதிப் பிரதமர் சுட்சுயா ஓகாடாவை டோக்கியோ நகரில் சந்தித்து இது குறித்து விபரித்தார் என ஜப்பானிலுள்ள இல ங்கைத் தூதரகம் தெரிவித்தது.

பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல் லிணக்க விடயங்கள் தொடர்பாக இலங்கையுடன் நெருக்கமான (20ஆம் பக்கம் பார்க்க)

## இன ரீதியில் அதிகாரப் பரவல் வேண்டாம்-சம்பிக்க



(கொழும்பு)

இன ரீதியான அடிப்படையில் மேற் கொள்ளப்படும் எந்தவித அதிகாரப் பரவலாக் கங்களையும் தாம் எதிர்ப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் மின்சக்தி அமைச் சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கிராமங்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதற்காக தான் குரல் கொடுப் பவர் எனவும் இனரீதியாக பிரிவினைவாதம் போசிக்கப்படும்படியான அதிகாரப் பரவலாக் கங்களை தாம் எதிர்ப்பதாகவும் சம்பிக்க ரண வக்க கூறியுள்ளார்.

இணையத் தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மக்களின் நலன்புரி / நட வடிக்கைகளுக் காக முன்னெடு க்கப்படும் வேலைத் திட்டங்களை நாங் கள்எதிர்க்கவில்லை.

நான் பௌத்த மதத்தைப் பின்பற்றும் மனிதன். நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் என்று கூறும் கதை களில் எந்த உண்மையும் இல்லை.

உதாரணமாக நான் மின்சக்தி அமைச் சராகப் பொறுப்பேற்ற பின்னர் வடக்கிலுள்ள கிராமங்களுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் போதனாவின் நிலையை அறிய உயர் அதிகாரிகள் குழு விஜயம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிலைவரம் குறித்து சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் நேற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஆனந்த குணசேகரா உள்ளிட்ட சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் குழுவிணர் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதி ராஜா உள்ளிட்ட யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தினர், வைத்திய நிபுணர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தொடர்பாக அண்மைக்காலமாக எழுந்துள்ள விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை பிரதிப்பணிப்பாளர் நாயகம் ஆனந்த குணசேகரா மேற்கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி கொழும்பு தேசிய வைத்திசாலைக்கு இடமாற்றம் செய் யப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதோடு அவரைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரியாக பணிபுரியுமாறும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-6)





## புதிய கற்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (NVQ level IV) மற்றும் தொழில் தேடுபவர்களுக்கான தொடர்பாடலில் ஆங்கிலம் (6 மாதம்) ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பமாக உள்ளதால் எதிர்வரும் 6-ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக பதிவினை மேற்கொண்டு கற்கைநெறியில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கல்வித் தகைமையாக க.பொ.த. சா/தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், தொழிநுட்பவியல் கல்லூரி, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி பெற்றுக் கொள்ளலாம்.. (ந-8)

# சாரதியின் உறக்கத்தினால் கடலினுள் இறங்கியது ஹயஸ்



(யாழ்ப்பாணம்)

சாரதி உறங்கியதனால் பண்ணைக் கடலினுள் பாய்ந்து ஹயஸ் வான் ஒன்று விபத்துக்குள்ளானது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழாவான நேற்று ஆலயத்திற்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த வாகனத்தில் சென்று கொண்டிருந்தவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

குறித்த வாகனத்தில் சாரதியும் அவரது நண்பனும் ஆலயத்திற்கு நேற்று முன்தினம் சென்றுள்ளனர். இந்நிலையில் நேற்று மதியம் தேர்த்திருவிழாவில் பங்கு கொண்டு விட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இதன்போதே குறித்த வாகனத்தில் சாரதி உறங்கியுள்ளார். இதனால் வாகனம் தடம் புரண்டு வீதியின் ஓரமாக நடப்பட்டிருந்த பாதுகாப்பு கற்களை உடைத்துக் கொண்டு கடலினுள் பாய்ந்துள்ளது.

வாகனம் கடலினுள் பாய்ந்ததை அப்பகுதியால் பயணித்தவர்கள் திரண்டு வந்து பார்வையிட்டுச் சென்றதோடு கைத்தொலைபேசியில் புகைப்படங்களையும் எடுத்துச் சென்றதை அவதானிக்கக் கூடியதாகயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

## முக்கிய அறிவித்தல்

**இன்று 03.07.2012 செவ்வாய்க் கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவிருந்த எமது கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 07.07.2012 சனிக் கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.**


அதிபர்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
வல்வெட்டித்துறை

(8746)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவகுருநாதன்

**(இ.போ.சபை வடபிராந்திய முன்னாள் முகாமையாளர்- காரைநகர்)**



வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவகுருநாதன் (இ.போ. சபை வடபிராந்திய முன்னாள் முகாமையாளர், காரைநகர்) 02.07.2012 திங்கட்கிழமை இறைவனடி எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கனகம்மா தம்பதியினரின் பாசமிகு இளைய மகனும், துரைரத்தினசிங்கம் காலஞ்சென்ற சிவதேவி தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயந்தியின் அன்புக் கணவரும், யனுசியா, தினேஷ், விஜிந், டிலானி, டிலக்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகதாசின் அன்பு மாமனாரும், டிருஷன், ரிசானா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகராசா, செல்வதியம்மா, நாகேஸ்வரியம்மா மற்றும் வள்ளிநாயகி, தெய்வநாயகி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி நாகராசா (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சிற்றம்பலம், மற்றும் கிருபைநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன் கிழமை 04ஆம் திகதி முற்பகல் 11.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூளாய் வீதி (கண்ணகி அம்மன் வீதி),
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்

(C-389)

## நல்லூர் பிரதேச சபை

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 04.07.2012 தொடக்கம் 16.07.2012 பி.ப. 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி :17.07.2012 மு.ப. 10.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 17.07.2012 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. ICTAD வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/ செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | எமது சபையின் கடைகள் புனரமைத்தல் (கோண்டாவில்) | 3000.00 | 500.00 | M10/C10 |
| 02 | திருநெல்வேலி வாலைக்குலைச் சந்தை மதில் அமைத்தல் | 3600.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை
கொக்குவில்.

திரு. ப. வசந்தகுமார்
தவிசாளர்

(C-384)

## சுவரொட்டி விளம்பரம்

நகரின் முக்கிய பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் எந்தவிதமான விதிமுறைகளுமின்றி தம் எண்ணப்படி கண்ட இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டி நகரின் அழகுக்கு மாசு ஏற்படுத்துவதைத் தவிர்க்குமுகமாக இனங்காணப்பட்ட 25 முக்கிய இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்விடங்களில் சுவரொட்டி விளம்பரங்களை காட்சிப்படுத்த விரும்புபவர்கள் யாழ் மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு, அனுமதி பெற்று இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

திருமதி யோ. பற்குணராசா,
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C-388)

## இன்று ஒரு தகவல்

### சோதனை ஏன்?

ஆண்டவன் அடிக்கடி என்னையே சோதித்துக் கொண்டிருக்கிறார் சேர்!

இது பல பேருடைய கவலையாகும்.

இப்படி கவலைப்படுகிறவர்களுக்கு ஆறுதலாக ஒரு கதை கிடைத்துள்ளது.

அதை உங்களின் காதுகளில் போட்டு வைக்கலாமென ஒரு ஆசை. ஒரு காலத்திலே... ஒரு பெரியவர் இருந்தார். ஆண்டவன் அவருக்கு அடிக்கடி தரிசனம் கொடுப்பது வழக்கம் சாதாரணமாக வந்து தரிசனம் கொடுப்பது மட்டும் இல்லை. சற்றுநேரம் உட்கார்ந்து அவர்கூட கதைத்துக் கொண்டு போவதும் வழக்கமாயிற்று.

ஒரு நாள் இவரை தேடிக் கொண்டு ஒரு ஏழை பக்தர் வந்து சேர்ந்தார். வாழ்க்கையில் வறுமை என்பது அவரைத்தான் ஆட்கொண்டிருந்தது. அதன் பிடியில் சிக்கிநொந்து நூலாகி கந்தலாகி இருந்தார். கஷ்டத்தின் பிடியில் அவர் மாட்டிக் கொண்டு சிக்கித் தவித்தார்.

இவர் வந்து அந்தப் பெரியவரை சந்தித்தார். "ஏங்க? நீங்கள் தானே அடிக்கடி ஆண்டவருடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எனக்காக அவரிடம் ஒரு விடயம் கேட்டுச் சொல்லக்கூடாதா?" என்றார்.

"என்ன கேட்க வேண்டும்?" சொல்லுங்கள் கேட்கிறேன் என்றார்!

"அவர் ஏன் எனக்கு மட்டும் கஷ்டத்தின் மேல் கஷ்டம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்" கேட்டு சொல்ல முடியுமா?

இவ்வளவிற்கும் நான் தினமும் அவரைத்தான் கும்பிட்டுக் கொண்டிருக்கிறேன்... இருக்கிற கஷ்டத்திலே நான் வாழும் குடிசையும் இடிந்து விழுந்து விட்டது. இப்போது தங்குவதற்கு கூட இடமில்லை நடுத்தெருவில் நிற்கிறேன்! என்றார்.

"சரி.... கடவுள் வரட்டும் கேட்டுச் சொல்கிறேன்" என்றார் அந்தப் பெரியவர்.

நாட்கள் உருண்டோடியது ஒரு நாள் பகவான் வந்தார் பெரியவரை சந்திப்பதற்காக...

உடனே இவரும் அந்த ஏழை பக்தர் கூறிய விடயத்தை பற்றி ஆண்டவரிடம் கேட்டார்.

"இதற்கு நான் பதிலளிக்கிறேன்.... ஆனால், அதற்கு முன்னர் நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றார் கடவுள்.

"என்ன செய்ய வேண்டும்?" என்றார் இவர்.

"ஒரு செங்கல் வேண்டும்" என்றார்.

உடனே அந்தப் பெரியவர் புறப்பட்டு பக்கத்து "டவுனுக்கு" போனார். அங்கே பார்த்தால் எல்லாம் பெரிய பெரிய கட்டடம் இருக்கிறது. அதிலேயும் செங்கல்லை எடுக்க இவருக்கு மனசு வரவில்லை.

அவர் இப்படியாக பார்த்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தார்.

அங்கே பாதி இடிந்து போன வீடு மீதியும் எப்போது இடிந்து விழும் என்ற நிலை.

இவர் போய் அதிலேயிருந்த ஒரு செங்கல்லை பிடித்து இழுத்தார். இவர் இழுத்த வேகத்தில் மீதி கட்டடமும் பொலபொல வென கொட்டிப் போனது.

இவர் அதைப்பற்றி கவலைப்படவில்லை. எடுத்த செங்கல்லை கொண்டு வந்து கடவுளிடம் கொடுத்தார்.

"இந்தக் கல்லை எங்கே இருந்து எடுத்துக் கொண்டு வந்தாய் என்றார்.

இவர் நடந்த விடயத்தைச் சொன்னார்.

"ஏன் அங்கேயிருந்த பெரிய கட்டடங்களிலேயே எடுக்கவில்லை? என்று கடவுள் கேட்டார்.

"அவையெல்லாம் நல்ல கட்டடமாக இருந்தது. அதிலே எடுத்தால் அதன் அழகு கெட்டுப் போய்விடும். பழைய வீட்டிலிருந்து எடுத்தது. நல்லதாகப் போய் விட்டது. இப்போது புதுவீடு கட்டி விடுவார்கள்" என்றார்.

இதன்பின்னர் கடவுள் விளக்கம் கொடுத்தார்.

"நான் அந்த பக்தனுக்கு கஷ்டம் கொடுப்பதற்கான காரணம் அவனுக்கு வைராக்கியம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக...

கஷ்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவன் புதுமனிதனாக ஆகி விடுவான்" என்றார்.

இது தான் அந்தக் கதை இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால்... துன்பத்தைக் கண்டு துவண்டு போய்விடக் கூடாது. துன்பம் வரும் வேளையில் நமக்கு மனவுறுதி வர வேண்டும். அந்த மனவுறுதியை துணையாக வைத்துக் கொண்டு புது மனிதப்பிறவி எடுக்கலாம்.

"ஐயோ கஷ்டம் விட்டதே" என்று நாம் தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தால் பின்னர் என்ன அப்படியே உட்கார்ந்து கொள்ள வேண்டியது தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## வவுனியாவில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியை 5 ஆயிரம் பேர் பார்வை

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இன்று வரை மாபெரும் வர்த்தகக் கண்காட்சியொன்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய தினம் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் கண்காட்சியில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சியினை பார்வையிடுவதற்காக வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு, துணுக்காய், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, யாழ்ப்பாணம்,தீவகம்ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது. நேற்றைய கண்காட்சியை ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-266)

## யாழ்.மத்திய கல்லூரியில் சொல்லாடு களம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைப் பதிவு செய்வதில் முன்னணி வகிப்பவர் கே.டானியலா? செ.கணேசலிங்கனா? எனும் தொனிப் பொருளில் சொல்லாடு களம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வின் தலைமையுரையை யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் ஆற்ற தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார். கே.டானியல் என வாதிட யாழ்.எயிட் நிறுவன இணைப்பாளர் திருமதி றஜீவன் தர்மினி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.சந்திரசேகர், மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் வே.நகுலன் ஆகியோரும் செ.கணேசலிங்கன் என வாதிட கரைச்சி பிரதேச செலயக கலாசார உத்தியோகத்தர் கு.றஜீவன், ஆசிரியர் த.அஜந்தகுமார், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

நோக்குநர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ கற்கைகள்பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் இடம்பெறுவர்.

யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நடுநிலை வகிப்பார். அத்துடன் இளைய தலை முறையின் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இந்நிகழ்வு ஆற்றுகை செய்யப்படுவதோடு உயர்தர கலைப்பிரிவு, பட்டதாரி மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவானதாகவும் இடம்பெறவுள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80-110 | 90 | 70 |
| உருளைக்கிழங்கு | 85 | 90-110 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 200 | 200 | 160 |
| தக்காளி | 140 | 140 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 70-80 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 160 | 100 | 150 |
| பூசணி | 80 | 60 | 60 | 60 |
| புடோல் | 70 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 50-60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 100-110 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 85 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 160 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 70 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 140 | -- | -- |
| பயற்றங்காய் | 90 | 80 | 150 | 50 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 | 160 |
| பீற்றூட் | -- | 80 | 70 | 90 |
| கறிமிளகாய் | 160 | 140 | 140 | 180 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 200 | 120 |
| போஞ்சி | -- | 170 | 170 | 180 |
| கத்தரிதம்புள்ள | -- | -- | 80 | -- |
| கீரை - 1 பிடி | 05-10 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 100 | 90 | 95 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 30 | 18-20 |

## இராசி பலன்

03.07.2012
(ஆனி 19, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பூரணை பின்னிரவு 1.03 மணிவரை
மூலம் பிற்பகல் 5.02 மணிவரை
இராகுகாலம் 2.57-4.27 மணிவரை
சுபநேரம் 10.27-11.57 மணிவரை
பூரணை விரதம்.

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மன வருத்தமடையும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாணங்களில் அவதானமாக இருக்கவும், உடல் நலனில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**மிதுனம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்** பகை விலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், பண வருவாய் திருப்தி தரும், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிங்கம்** சிறப்பான நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறும், புதிய நபர்களின் சந்திப்புண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** தூரத்துச் சொந்தங்களால் நன்மை கிடைக்கும், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும், இளைய சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தினர்களின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** சிந்தனை மிகுதியான நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர், பயணங்கள் உருவாகும்.

**மகரம்** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், போசன சுகமுண்டு, சயன சுகக்குறைவான நாள்.

**கும்பம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், முயற்சிகள் கைகூடும்.

**மீனம்** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

# பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் எங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள்

## உயர்தொ.நு. பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் தம்மையும் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தி யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப்பட்டதாரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தமது நிலைமையினை வெளிப்படுத்தும் வகையில் உயர்தொழில் நுட்பவியல் பட்டதாரி மாணவர்கள் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உங்களுடைய பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

அத்தோடு நாளை மறுதினம் அமைச்சரவையில் உயர்தொழில்நுட்பவியல் மாணவர்களின் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் தொடர்பாகப் பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஏனைய மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றால் உங்களுக்கும் வழங்கப்பட்டதாக நினைத்துக்கொண்டு உறுதியுடன் இருங்கள் எனவும் தெரிவித்தார்.



இதனைத் தொடர்ந்து தமது கருத்தினை முன்வைத்த பட்டதாரி மாணவர்கள், ஏற்கனவே பல மாவட்டங்களிலுள்ள உயர்தொழில் நுட்பவியல் நிறுவன பட்டதாரி மாணவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் மட்டும் புறக்கணிக்கப்படுவது ஏன் எனவும் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மாணவர்கள் தமது கைகளில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 46 (90) இலக்க சுற்று நிருபம் வெறும் காகிதமா!, 1990 ஆம் ஆண்டிலிருந்து நியமனம் வழங்கப்பட்டபோதும் ஏன் இவ்வருடம் பாகுபாடு? பல்கலைக்கழகப் பட்டத்திற்கு சமனான பட்டம்பெற்ற எம்மைப்புறக்கணிப்பது ஏன்? எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.எம் பட்டம் பொய்யானதா? எமது எதிர்கால நிலை என்ன? போன்ற கேள்விகளையும் தாங்கிய பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டிருந்தனர்.

இதேவேளை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பில் தம்மையும் இணைத்துக்கொள்ளுமாறு உயர் தொழில் நுட்பவியல் நிறுவனப் பட்டதாரிகள் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தைச் சந்தித்து கலந்துரையாடியதோடு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்னவினையும் கடந்தவாரம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

ஆயினும் இவ்வமைச்சினால் தொழில் நுட்பவியல் நிறுவனப்பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப் பட மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பட்டதாரிகள் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்தப் பட்டதாரிகள் யாழ். மனித வுரிமை ஆணைக்குழுவில் தமக்கான நியமனம் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்து முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளனர்.

பல தரப்பட்டவர்களினாலும் உயர் தொழில் நுட்பவியல் பட்டதாரிகளை பட்டதாரிகள் பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (அ-6)




## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில்,மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி,கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம்,தட்டாதெரு பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப் பிட்டுள்ளார். (அ-9)

## எரிபொருள் நிலையங்கள் சீராக திறக்கப்படுவதில்லை

### கடற்றொழிலாளர்கள் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் திறக்கப்பட்டுள்ள சில எரிபொருள் மற்றும் கடற்தொழில் உபகரண விற்பனை நிலையங்கள் திறக்கப்படுவதில்லை என கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடற்தொழில் நிமித்தம் எரிபொருள் பெறுவதற்காகவும் மற்றும் கடற்தொழில் உபகரணங்களை கொள்வனவு செய்ய வரும் கடற்தொழிலாளர்கள் விற்பனை நிலையங்கள் சீராக திறக்கப்படாமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

எனவே விற்பனை நிலையங்கள் திறக்கப்படும் நேரத்தை வரையறுத்து நுகர்வோருக்கு காட்சிப்படுத்த வேண்டும்.

இவ்விற்பனை நிலையங்களை கண்காணிக்கும் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் சங்கங்களின் சமாச நிர்வாகம் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டுமெனவும் கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-64)

## இலங்கை வங்கிக்கிளைகள் திறப்புவிழா நாளை

(பருத்தித்துறை)

வடமராட்சியில் இரண்டு இலங்கை வங்கி கிளைகள் நாளை புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

மருதங்கேணியில் காலை 9.30 மணிக்கும் மந்திகையில் 11.30 மணிக்கும் இக் கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்கவும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் டி.வினோதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விரு வங்கிக் கிளைகளையும் பிரதம விருந்தினர் திறந்து வைக்கவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் எஸ். தர்மராசா மேற்கொண்டுள்ளார். (அ-3-10)

## கிராம்புவில் பகுதிகளில் கட்டாக்காலிகள் தொல்லை

(சாவகச்சேரி)

கல்வயல் விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட கிராம்புவில் பெருங்குளம் தோட்டம் மற்றும் வயல் வெளிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையும் பன்றிகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலபோக நெற்செய்கையின் போதும் உப உணவு பயிர்ச்செய்கையின் போதும் பன்றிகளால் சேதம் விளைவிக்கப்படுவதாகவும் உப உணவுப் பயிர்களான வத்தாளை, மரவள்ளி போன்றவற்றை பன்றிகள் நாசம் செய்வதால் பயிர் செய்கையை நிறுத்தியுள்ளதாகவும் அவ்விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி கால்நடைகளும் பூசணி போன்ற உப பயிர்களை உண்டு வருவதால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாகவும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)

## வீதிப்போக்குவரத்தை மீறியோருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிப்பு

நெல்லியடி பொலிஸ் பிரிவில் வீதிப்போக்குவரத்தை மீறிய இரு நபர்களுக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நெல்லியடி பிரதேசத்தில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இரு நபர்களுக்கு எதிராக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.



வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு உடுப்பிட்டியை சேர்ந்த நபர் ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் கரவெட்டியை சேர்ந்த நபரொருவருக்கு மூவாயிரம் ரூபாவும் அபராதமாக விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-24)

## விசேட கல்வி பொறுப்பாசிரியர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விசேட கல்வி பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாகாண மட்ட விசேட கல்வி விளையாட்டுவிழா தொடர்பாக கலந்துரையாடப்படும். அனைத்து விசேட கல்வி ஆசிரியர்களையும் விசேட கல்விப் பொறுப்பாசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)


யாழ். மாவட்டத்திலிருந்து பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி ஒருவர் மங்கள விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதங்களை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

## நாவலர் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நாவலர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஈஞ்சடி பாடசாலை மைதானத்தில் தலைவர் இ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் கல்விப் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

விசேட விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். குகநேசன், சிறப்பு விருந்தினராக மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் கு. கௌசிகன், மாகாண பொது நிர்வாக செயலக முகாமைத்துவ உதவியாளர் ச.திவ்யன், தாதிய உத்தியோகத்தர் சி. பவன், சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ. கேமநளினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறார்களின் உடற்பயிற்சி இசையும் அசைவும், விநோத உடை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (அ-2)

# குற்றச்செயலுடன் தொடர்புடையவர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கவேண்டாம்

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க வேண்டாம் என இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், போதைப்பொருள் வர்த்தகம், குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டாம் என நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யும் மக்களும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும்.

கல்வித்தகைமை, அரசியல் நோக்கம், நன்னடத்தை மற்றும் சமூக அந்தஸ்து ஆகிய காணிகளை கருத்திற்கொண்டு மக்கள் வாக்களிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# நாட்டின் விவகாரங்களில் சீனா தலையிடுவதில்லை

இலங்கையின் உள்விவகாரங்களில் சீனா ஒருபோதும் தலையீடு செய்வதில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய சீனத் தூதுவர் வூ ஜியனாவோவைச் சந்தித்த போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் சீன அரசாங்கம் இலங்கைக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கி வந்தது. எனினும் நாட்டின் உள்விவகாரம் தொடர்பான தீர்மானங்ள் மற்றும் கொள்கைகளில் சீனா எந்தச் சந்தர்ப்பத்திலும் தலையீடு செய்தது கிடையாது .சீனா இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் பாராட்டுக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## இந்துபோட் இராசரத்தினத்தின் பிறந்தநாள் விழா

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் இந்துபோட் இராசரத்தினத்தின் பிறந்தநாள் விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவ வித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேசசெயலர் பா. செந்தில் நந்தனன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அன்றைய தினம் பெரியார் சு. இராசரத்தினத்தின் சிலைக்கு மலர் மாலை சூட்டி நினைவுப் பேருரை இடம்பெறும்.

இந்நினைவுப்பேருரையை சமூக இருப்பில் கல்வியின் பங்கு எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி ஆற்றுவார். (அ-2)


கல்யாண மாலை

மணமகள் தேவை

பிறப்பு:- 1984 விஸ்வகுலம்
நட்சத்திரம்:-கேட்டை 3
கி.பா:-50.75, 8 இல் செவ்
தொழில்:-சுப்பர் மாக்கட் U.K
Msc.Software Engineering
எதிர்பார்ப்பு:- வெளிநாட்டு (P.R) உள்ள பெண் குலம் மாறி செய்யவும் விருப்பம்
B/015

பிறப்பு:- 1983 இந்து
நட்சத்திரம்:-ரேவதி 4
கி.பா:-42.5, 8 இல் செவ்
தொழில்:-சாரதி, டோகா
B/031

பிறப்பு:- 1981 இந்து
நட்சத்திரம்:-ரோகிணி 3
கி.பா:-12, 11 இல் சூரி, செவ்
தொழில்:-மின் இணைப்பாளர் (சொந்த தொழில்)
B/043

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பூசம் 1
கி.பா:-144, 7 இல் சூரி,செ,கே
தொழில்:-MBS(U.K) வியாபார முகாமையாளர் லண்டன்
B/007

பிறப்பு:- 1981 இந்து வேளாளர்.
நட்சத்திரம்:-ரோகிணி 4
கி.பா:-7.5, 2 இல் செவ்வாய்
தொழில்:-முகாமையாளர் தாய்லாந்து
எதிர்பார்ப்பு:- சமயம் மாறி செய்யவும் சம்மதம்.
B/030

மணமகன் தேவை

பிறப்பு:- 1973 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 3
கி.பா:-54.5, 7 இல் செவ்
தொழில்:-ஆசிரியை
விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்.
G/035

பிறப்பு:- 1970 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி 2
கி.பா:-42, 4 இல் செவ்
எதிர்பார்ப்பு:-அரச, தனியார் (சிங்கப்பூர்)
G/027

பிறப்பு:- 1964 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-பூரட்டாதி 1
கி.பா:-48, 7 இல் செவ், சூரி
தொழில்:-ஆசிரியை
விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்
G/028

பிறப்பு:- 1969 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-ரேவதி 3
கி.பா:-44.25, 2 இல் செவ்வாய்
தொழில்:-அரச சுருக்கெழுத்தாளர்
G/003

பிறப்பு:- 1969 றோ.க
நட்சத்திரம்:-உத்தராடம் 3
கி.பா:-53,
தொழில்:- தையல் (சுய)
சமயம், குலம் மாறிச் செய்யவும் சம்மதம்
G/040

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

# அரசாங்கத்திற்கு விசுவாசமாக செயற்படும் கிராமப்புற மக்களுக்கு சேவையாற்றுங்கள்

## பயிலுநர் பட்டதாரிகளிடம் யாழ்.அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**கிராமப்புற மக்களுக்கு உங்களுடைய சேவை அதிகளவில் பயனுள்ளதாகவிருப்பதோடு அரசாங்கத்திற்கு விசுவாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களிடம் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்தார்.**

யாழ்.மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளை பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக் கொள்வதற்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு இடம் பெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

பட்டதாரி பயிலுநர் நியமனக்கடிதம் பெறும் பட்டதாரிகள் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் உடனடியாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்த நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற சகல அபிவிருத்தி திட்டங்களுக்கும் சரியான முறையில் தரவுகள் புள்ளிவிபர அடிப்படையில் பேணப்பட வேண்டியது இவர்களின் பொறுப்பாகும். புள்ளிவிபர அடிப்படையில் சரியான தகவல்களைப் பெறுவதற்கு பிரதேச செயலகங்களில் பட்டதாரி பயிலுநர்கள் அமர்த்தப்படுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தீவுப் பகுதிகள், மருதங்கேணி, தெல்லிப்பழை போன்ற பிரதேசங்களில் இன்னும் பல இடங்கள் விருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. இந்த இடங்களில் ஆளணிப் பற்றாக்குறையும் நீண்ட காலமாகவுள்ளது.

இவற்றை விருத்தி செய்ய அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் சேவை செய்ய வேண்டும். மேலும் யாழ்.மாவட்டத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, விவசாயத்துறை அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, தெங்கு தோட்டத்துறை அமைச்சு, விவசாய அமைச்சு போன்ற பல அமைச்சுக்களின் கீழ் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அத்தோடு இந்த அமைச்சுக்களினால் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாகவே பட்டதாரி பயிலுநர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அதிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கே அதிகமானவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பட்டதாரி பயிலுநர்கள் கிராமப்புற அபிவிருத்தியில் கூடுதல் கவனம் எடுப்பதோடு அரசாங்கத்திற்கு விசுவாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வஸ்திரி அலென்ரின், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)



கிருஸ்ணபுரத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடுவதையும் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

## பிரபஞ்சலிங்க பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய பிரபஞ்சலிங்க பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

மேலும் கும்பாபிஷேக தினமான நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொடியேற்றத்திருவிழா நடைபெற்று அதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-2-9)

# சிறைச்சாலை கைதிகள் நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நிலவிவரும் கைதிகள் நெரிசல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒத்துழைப்பு வழங்கப்படும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கைச் சிறைச்சாலைகளில் அதிகளவு கைதிகள் நெரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் பல்வேறு சிறைச்சாலை அதிகாரிகளும் கைதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாவும் போதியளவு இட வசதியின்றி கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் பல்வேறு மனிதாபிமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

சிறைச்சாலைகளில் அதிகளவான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை அரசு அண்மையில் ஒப்புக் கொண்டுள்ளது.

இலங்கை சிறைச்சாலை கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் சன நெரிசல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களின் தரத்தை மேம்படுத்த உதவிகளை வழ்ங்கத் தயார் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

(அ-2)


## பூநகரி மட்டுவில் நாடு சோபாலபிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 2012



| கும்பாபிஷேகம் | எண்ணெய்க்காப்பு சாத்துதல் |
|---|---|
| 05.07.2012 | 04.07.2012 |
| வியாழன் | புதன் |
| மு.ப.9.04-10.43 வரை | மு.ப.7.00-4.00மணிவரை |

விநாயக அடியார்களே!
இடம்பெயர்ந்த எம் உறவுகளே!
கடல் கடந்த நாடுகளில் வாழும் எம் உறவுகளே!

எம்பெருமான் கும்பாபிஷேக பெருவிழாவிற்கான இவ் அறிவித்தலை ஏற்று விழாவில் கலந்து விநாயகப்பெருமான் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

விசேட நிகழ்வாக ஈழத்தின் தலைசிறந்த பாடகர்களான சாந்தன் - சுகுமார் இணைந்து வழங்கும் இசை நிகழ்வு இடம்பெறும்.

சோபாலப்பிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பூநகரி.

ஆலய பரிபாலன சபையினரும் புலம்பெயர் வாழும் நாடுகளின் நிர்வாகிகளும்.

(8747)


# கடற்படையினரின் தாக்குதலுக்கு முடிவுகாணும் வரை மீன்பிடி புறக்கணிப்பு

## இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதலுக்கு முடிவு காணும் பொருட்டு மீன்பிடி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் முடிந்து வெறும் 10 நாட்கள் மட்டுமே நிம்மதியாக மீன்பிடித்ததாகவும் அடுத்தடுத்து இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு ஆளாவதோடு மீன்களையும் அவர்கள் கொண்டு செல்கின்றனர்.

மீன்பிடி வலைகளையும் நாசப்படுத்தி விடுவதாக கலக்கத்துடன் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு ஒரு முடிவு தெரியாமல் கடலில் மீன்பிடிக்கப்போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள்.

20 ஆயிரம் மீனவத் தொழிலாளர்கள் இப் போராட்டத்திற்கு ஆதரவாக போர்க் கொடி உயர்த்தியுள்ளனர். மேலும் மாவட்ட ஆட்சியரிடம் மனுவொன்றை கையளிக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னரும் கச்சதீவு அருகே இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததாக அங்கிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன. (அ-2)

# நாட்டில் ஒழுக்கம் மிக்க அரசியல் கலாசாரம் உருவாக வேண்டும்

## சரத் பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் ஒழுக்கம் மிக்கதோர் அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது எனது புகைப்படத்தை காட்சிப்படுத்தி திரைப்படங்கள் கூட தயாரிக்கப்பட்டன. நான் ஹிட்லரைப் போன்றோ அல்லது இடியமீனைப் போன்றோ ஆட்சி செய்வேன் என அந்தப் படங்களில் சித்திரிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு பிரசாரம் செய்த நபர்கள் ஹிட்லரை சிறையில் அடைத்தார்கள். உண்மையில் ஹிட்லரும் இடியமீனும் இராணுவ ஜெனரல்கள் அல்ல என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் இராணுவத்தில் மிகச் சிறிய பதவிகளை வகித்தவர்கள். சூழ்ச்சித் திட்டங்களின் மூலம் அதி காரத்தை கைப்பற்றி பின்னர் ஜென ரல் பதவிகளை பெற்றுக் கொண்டவர்கள்.

இடியமீன் இராணுவத்தில் கடமையாற்றிய சமையற்காரர் ஒருவர். எனினும் இராணுவ ஜெனரல்கள் உலகின் முக்கிய நாடுகளில் வெற்றிகரமாக ஜனாதிபதி பதவியை வகித்துள்ளனர். இந்த நாட்டில் ஒழுக்க மிக்க ஓர் அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஓர் அரசியல் சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அவசியமானது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

(அ-2)

# விவசாய துறையை விருத்தி செய்ய முன்னாள் போராளிகள் இணைப்பு

## பாதுகாப்பு அமைச்சு அனுமதி என்றார் நாமல்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் தெரிவு செய்யப்பட்ட 5 ஆயிரம் இளைஞர், யுவதிகள் சிவில் பாதுகாப்பு படைப்பிரிவில் தொழில் நடவடிக்கைகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வார பத்திரிகையொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பத்திரிகைக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த விடயம் தொடர்பாக நான் பாதுகாப்பு செயலாளரிடம் முன் வைத்த கோரிக்கைக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதன்படி அவர்களின் சேவைகளை பிரதேசத்தின் விவசாய துறையை விருத்தி செய்வதற்காக பெற்றுக் கொள்ளவுள்ளோம்.

இதற்காக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 3 ஆயிரம் ஏக்கரை பயன்படுத்தி விசேட விவசாய பண்ணைகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதோடு அவர்களின் கல்வி மற்றும் தொழில் தகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மாதம் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கவும் எதிர்பார்த்துள்ளேன். (அ-2)

# அவதூறான செய்திகள் மூலம் மனிதவுரிமை மீறப்படுகின்றது

## தகவல் திணைக்களம் சுட்டிக்காட்டு

இணையத்தளங்கள் வெளியிடும் அவதூறான செய்திகளின் மூலம் மனித உரிமை மீறப்படுவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது.

அத்திணைக்களம் மேலும் தெரிவிக்கையில், சில இணையத்தளங்கள் அவதூறான செய்திகளை வெளியிடுவதுடன் இலாபம் மற்றும் குறுகிய நோக்கங்களை அடிப்படையாக கொண்டு சேறு பூசல்களில் ஈடுபட்டு வருகிறது.

தனிப்பட்ட நபர்கள் மற்றும் சில தரப்புக்கள் மீது காழ்ப்புணர்ச்சியுடன் அவதூறான செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இளைஞர் சிறுவர் சமுதாயம் அதிகளவில் இணையத்தை பயன்படுத்துவதனால் இவ்வாறான செய்தி இணைய தளங்களின் மூலம் நாட்டிற்கு பாரியளவு பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

இதேவேளை இணையத்தளங்கள் அரசியல்வாதிகளுக்கு எதிராக சேறு பூசவே தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றி செய்திகள் வெளியிடப்படுவதில்லை. வெறுமனே குற்றச்சாட்டுக்கள் மட்டுமே செய்தியாக வெளியிடப்படுகின்றன.

அவர்கள் தவறுகள் இழைத்திருந்தால் அவரது பெயர் விபரங்களுடன் நேரடியாக குற்றச்சாட்டை சுமத்த வேண்டும். கிசு கிசு பாணியில் செய்திகளை வெளியிடுவது ஊடக தர்மமாக அமையாது என்றும் அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.07 03

★ 324- ஏட்றியனோப்பில் நகரில் இடம் பெற்ற சமரில் ரோமப் பேரரசன் முதலாம் கொன்ஸ்டன்டீன் லிசீனியசை வென்றான்.

★ 987- ஹியூ காப்பெட் என்பவன் பிரான்சின் மன்னன் ஆனான். இவனது வம்சத்தினர் 1792 இல் பிரெஞ்சுப் புரட்சி இடம்பெறும் வரை பிரான்சை ஆண்டனர்.

★ 1250-பிரான்சின் ஒன்பதாம் லூயி எகிப்தில் ஏழாவது சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்தபோது பாய்பர்களால் பிடிபட்டான்.

★ 1608- கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.

★ 1754-ஏழாண்டுப் போர்: ஜோர்ஜ் வோஷிங்டனின் படைகள் நெச சிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தனர்.

★ 1775-அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வோஷிங்டன் மசாசுசெட் சில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.

★ 1778-அமெரிக்கப் புரட்சிப் போர்: பென்சில்வேனியாவில் பிரித்தானிய இராணுவத்தினர், பெண்கள், குழந்தைகள் உட்பட 360 பேரைக் கொலை செய்தனர்.

★ 1778- புருசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.

★ 1844-ஐஸ்லாந்தில் கடைசிச் சோடி பெரிய ஒக் பறவைகள் கொல்லப்பட்டன.

★ 1848-அமெரிக்கக் கன்னித் தீவுகளில் பீட்டர் வொன் ஸ்கொல்ட்டன் என்பவரால் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.

★ 1867- தமிழ்நாடு விழுப்புரம் வளவனூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1866-புருசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய- புருசியப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1890-ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43-ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: பெலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.

★ 1962-பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.

★ 1969-சோவியத்தின் என் 1 என்ற ஏவுகணை ஏவுதளத்திலேயே வெடித்துச் சிதறியது.

★ 1970-பிரித்தானிய விமானம் ஸ்பெயினில் மலையொன்றுடன் மோதியதில் 113 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1988-அமெரிக்க போர்க் கப்பல் பாரசிக வளைகுடா மீது பறந்த ஈரானிய பயணிகள் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியதில் அதில் பயணம் செய்த அனைத்து 290 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1883-பிரான்ஸ் காஃவ்கா, எழுத்தாளர் (இ.1924)

★ 1924-எஸ்.ஆர்.நாதன், சிங்கப்பூர் ஜனாதிபதி

★ 1942-அடூர் கோபாலகிருஷ்ணன், கேரளத் திரைப்பட இயக்குநர்

★ 1962-டாம் க்ரூஸ், அமெரிக்க நடிகர்

★ 1980-ஹர்பஜன் சிங், இந்தியக் கிரிக்கெட் வீரர்

### சிறப்பு நாள்

பெலாரஸ்- விடுதலை தினம் (1944)



எஸ்.ஆர். நாதன் என்று அழைக்கப்படும் செல்லப்பன் ராமநாதன் சிங்கப்பூரின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆவார்.

இவர் மலேசியாவில் இருந்து சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்த ஒரு தமிழராவார்.


அத்துடன் ஜப்பான் சிங்கப்பூரை ஆக்கிரமித்தபோது ஜப்பான் மொழியைக் கற்று, ஜப்பான் பொலிஸாருக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்தவர்.

பின்னர் தனது குமாஸ்தா வேலையை விட்டுவிட்டு மீண்டும் படித்து மலேசிய பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் சேர்ந்து தலைசிறந்த மாணவனாக வெளியேறினார். பல்வேறு பதவிகள் அரச பதவிகள் உட்பட இவரைத் தேடி வந்தன.

மலேசியா, அமெரிக்கா ஆகியவற்றுக்கான சிங்கப்பூர் தூதராகவும் பதவி வகித்தார்.

அத்துடன் சிங்கப்பூரின் அதிபராக 12 ஆண்டு காலம் பதவி வகித்தார்.

சிங்கப்பூர் வரலாற்றில் 12 ஆண்டுகள் பதவி வகித்தவர் இவர் ஒருவரேயாவார்.



அடூர் கோபாலகிருஷ்ணன் கேரளத்தை சேர்ந்த ஒரு உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர். 1972ஆம்ஆண்டில் சுயம்வரம் என்ற தன்னுடைய முதல் திரைப்படத்தை இயக்கியதன் மூலம் புகழ்பெற்றார். இவருடைய திரைப்படங்கள் அனைத்தும் உலக திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு மிக்க புகழ்பெற்றவை. உலக திரைப்படங்கள் தொடர்ந்து பெற்றன.

இவருடைய கலைப் பணிக்காக 2004 ஆம் ஆண்டிற்கான தாதாசாஹெப் பால்கே விருது வழங்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் இந்தியாவின் தலை சிறந்த விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது இவருக்கு வழங்கப்பட்டது.

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 10:- இம்மாதிரி பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஏதேனும் விசேஷ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமா?**

**பதில்:-** நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பின்வரும் சூழ்நிலைகளில் உடனடியாக மருத்துவமனைக்கு அல்லது மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட வேண்டும்.

★ அவன் சுவாசிக்கச் சிரமப்பட்டால்

★ அவனுக்கு வாந்திபேதி இருந்தால்

★ அதிகமாக வயிற்றுவலி இருந்தால்

★ அவனது சிறுநீரில் கீட்டோன் இருந்தால்

★ அவனுக்கு ஜுரம், குளிர் ஜுரம் அதிகமாக இருந்தால் அல்லது வேறு சில நோய்கள் இருந்தால்

**கேள்வி 11:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இரவில் தூங்க சிரமப்படுமா?**

**பதில்:-** இரவில் அவனுக்குச் சரியாக தூக்கம் வரவில்லை என்றாலோ, தலைவலி, சோர்வு,தலைக்கனம் இருந்தாலோ அவனது இரத்தத்தில் சீனி அளவு குறைந்திருக்கக் கூடும். இம்மாதிரி சூழ்நிலையில் படுக்கச் செல்லும் பொழுது அவனுக்கு பால், பழம் கொடுக்க வேண்டும். அவனது இரத்தத்தையும் பரிசோதிக்க வேண்டும்.

**கேள்வி 12:- நீரிழிவினால் பாதிக்கப்பட்ட குழந்தை பயணிக்கலாமா?**

**பதில்:-** அவனுக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரிந்து அவனால் இன்சுலின் ஊசியை கையில் எடுத்துச் செல்ல முடியும் என்றால் அவன் தாராளமாக பயணிக்கலாம். பாடசாலையில் அழைத்துச் செல்லப்படும் இன்பச் சுற்றுலாக்களுக்குச் செல்லலாம். அப்படிச் செல்கையில் கையில் தின்பண்டங்களும் எடுத்துச் செல்ல வேண்டும். திடீரென்று சீனி அளவு குறைந்தால் அவை பயன்படும். அவன் தினமும் தனக்கு இருக்கும் சீனி அளவைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி 13:- அவனுக்கு இன்சுலின் ஊசியோடு வேறு ஊசியும் போடலாமா?**

**பதில்:-** நீரிழிவு நோய் தவிர அவனுக்கு வேறு சில நோய்களும் வரக்கூடும். அப்படியிருந்தால் அவன் வேறு ஊசிகளும் போட்டுக் கொள்ளலாம். அவன் குழந்தையாக அல்லது பெரியவனாக இருந்தால் இன்சுலின் ஊசியோடு ஹெப்படிட்டிஸ் B (Hepatits B), டெட்டனஸ் (Tetanus) முதலிய ஊசிகளும் போட்டுக் கொள்ளலாம்.

**கேள்வி 14:- உடல் எடை அதிகரித்துக் கொண்டே வரும் குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் வருமா?**

**பதில்:-** தாய், தந்தை இருவரும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் குழந்தையின் உணவு மற்றும் உடல் எடையில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். காரணம் நீரிழிவு பரம்பரையாக வரும் நோய் என்று கருதப்படுகிறது. மேலும் குழந்தையின் உடல் எடை அதிகரிப்பதால் நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியக்கூறும் அதிகரிக்கும்.

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

**கேள்வி 01:- ஒரு நீரிழிவு நோயாளி தனது தினசரி வாழ்க்கையில் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?**

**பதில்:-** இரத்தத்தில் சீனி அளவைக் குறைப்பதற்கு தகுந்த மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதோடு ஒரு நீரிழிவு நோயாளி வேறு சில பிரச்சினைகள் வராமல் தவிர்ப்பதற்காக பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்புச்சத்தின் அளவை தொடர்ந்து பரிசோதித்து அறிந்து கொள்ள வேண்டும். இவை இயல்பு நிலையை விடக் குறைவாக இருந்தால் அதற்கு உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

★ வருடத்திற்கு ஒருமுறை கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். எத்தகைய கண்ணாடி அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் அப்பரிசோதனை இருத்தல் கூடாது. முழுமையான பரிசோதனையாக இருத்தல் வேண்டும். ஓர் இருட்டறையில் கண்களை முழுமையாகப் பரிசோதித்து உங்கள் கண்களின் உள்ளிருக்கும் படிமங்களையும் (Images) கூட அறிந்து கொள்ள வேண்டும்.

★ உங்கள் பாதங்களையும் சருமத்தையும் நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். காயம் பட்டாலோ ஏதாவது ஓரிடத்தில் வலி இருந்தாலோ அல்லது தொற்று இருந்தாலோ உடனே உங்கள் மருத்துவரிடம் செல்லுங்கள்.

★ புகை பிடிக்காதீர்கள். நீரிழிவுடன் உயர் இரத்த அழுத்தமும் இருந்து புகை பிடித்தால் நீரிழிவு நோயாளிக்கு ஆறு முதல் எட்டு மடங்கு இதயநோய் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது.

★ உங்கள் சிறுநீரகம் ஒழுங்காகச் செயற்படுகின்றதா என்பதை அறிந்து கொள்ள வருடந்தோறும் இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். முடிவு தெரிந்த பின்னர் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள்.

**14**

★ பிரச்சினை எதுவும் இல்லை என்ற போதிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் உங்கள் மருத்துவரைக் கலந்தாலோசியுங்கள். புதிய நீரிழிவு நோயாளிகள் மாதம் ஒருமுறை மருத்துவரிடம் சென்று சோதித்துக் கொள்ள வேண்டும். உங்கள் இரத்தத்தில் சீனி அளவு நிலையாக இருந்த போதிலும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை அதைப் பரிசோதித்து அனைத்துக் கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து கவனமாகப் பின்பற்றுங்கள்.


டாக்டர்.A.K.ஜிங்கான்

**கேள்வி 02:- ஆரம்ப நிலையிலேயே நீரிழிவு நோயைக் கண்டு கொள்வதால் விளையும் நன்மைகள் யாவை?**

**பதில்:-** அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிகமான தண்ணீர் தாகம், உடல் எடை இழப்பு போன்ற அறிகுறிகள் இருந்தால் உங்களுக்கு நீரிழிவு நோய் வந்து 8 முதல் 10 வருடங்கள் கழிந்துவிட்டன என்று பொருளாகும்.அதனால்தான் பெரும்பாலான நீரிழிவு நோயாளிகள் அதாவது 50 வீதத்தினர் முதல் முறையாக மருத்துவரிடம் வரும் பொழுதே அவர்களுக்கு கண் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு போன்ற கடுமையான பிரச்சினைகள் இருக்கும். உயர் இரத்த அழுத்தம், அதிக சீனி அளவு இருந்தால் அவை சிறுநீரகங்களை பாதித்து அதன் காரணமாக இதய நோய், பார்வைக் கோளாறு மற்றும் ஆண்மைக் குறைவு உண்டாகும்.

எனவே, நீரிழிவு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டு கொண்டால் இந்த பயங்கரமான பிரச்சினைகளை தவிர்க்கலாம் என்பதோடு நீரிழிவு நோய் இருந்தாலும் சராசரி மனிதனைப் போல் இயல்பு வாழ்க்கை வாழலாம்!

(தொடரும்)




# கோடையில் வயிற்றுத் தொல்லைகளும் அவற்றிலிருந்து விடுபடும் முறைகளும்


மாறிவரும் உணவுப் பழக்கங்களினால் வயிற்றுத் தொல்லைகள் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். வாட்டும் வெயில் ஒருபுறம் இருக்க மின்சாரம் தடைப்படுவதால் குளிர்வசதி மற்றும் பதப்படுத்தும் அநேக உணவு பொருட்கள் சீக்கிரமே கெட அவற்றை உண்டு நமது வயிறும் கெட கோடையில் அதிக வாய்ப்புண்டு. குறிப்பாக மாமிச உணவுகளை விரும்பி சாப்பிடுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**கோடையில் ஏற்படுகின்ற தொல்லைகள் யாவை?**

நீர்க்கடுப்பு, வயிற்றுப்போக்கு, வயிறு உப்புசம், மந்தம், வயிற்றுப்புண் போன்றவை கோடையில் தாக்கும். குறிப்பாக அதிகமாக வெளிவேலைகள் நிமிர்த்தமாக பல்வேறு பிரதேசங்களுக்கு செல்பவர்கள் உணவு மற்றும் தண்ணீர் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சலக்கடுப்புக்கு முக்கிய காரணம் உடலில் தண்ணீர் பற்றாக்குறைதான். கோடையில் அதிகமாக வியர்ப்பதால் நாம் உட்கொள்ளும் தண்ணீர் வியர்வையின் அளவிற்கேற்ப அதிகமாக தேவை. சிறுநீரகம் நன்றாக இயங்கி சிறுநீர் நன்றாக சென்றால் தான் உடலுக்கு நல்லது. கோடையில் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். குறைந்த பட்சம் 10 டம்ளர் தண்ணீராவது குடிக்க வேண்டும். இது அதிகமாகலாம். ஆனால் குறையக்கூடாது.

சிலர் நான் தண்ணீர் அரு ந்துவதில்லை. ஆனால் தேநீர், கோப்பி, கோலா, பழரசம் என்னும் பல்வேறு விதமாக தண்ணீரை சேர்க்கிறேன். இது போதாதா என்று கூறுவர்.



தண்ணீரை வெறும் தண்ணீராக தான் அருந்த வேண்டும். இதை ஏனைய பொருட்களுடன் சேர்த்து அருந்துவதால் தண்ணீர் அருந்திய பயன் தராது. கோடையில் அதிகமாக தண்ணீரை பருகவும் தாதுக்கள் அதிகமாக உள்ள இளநீரை அருந்தலாம்.

கோடையில் வயிற்றுப்போக்கு ஏற்படுகின்ற வாய்ப்புக்கள் அதிகம். குறிப்பாக மாமிச உணவுகளை விரும்பி சாப்பிடுபவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மீன், இறால் போன்றவைகள் சீக்கிரமே கெட்டுவிடும். பெரிய நிறுவனங்கள் சிறப்பாக குளிர்த் தன்மை கொண்ட *Deep Freezer* இவற்றை பதப்படுத்தி குளிர் பெட்டிகளில் இவற்றை வைத்து பல்வேறு இடங்களுக்கு அனுப்புவார்கள். ஆனால் இவற்றை வாங்கி சமைக்கும் இடங்களில் இம் மாதிரியான சிறப்பான குளிர் செய்யும் வசதிகள் இருக்காது. சாதாரண குளிர்சாதனப் பெட்டிகளில் இவற்றை வைக்கும் போது மின்சாரத் தடையால் இவை குளிராமல் கெட வாய்ப்புண்டு. இதுபோலவே தான் மாமிச உணவுகள், முட்டை போன்றவை கெடவும் வாய்ப்பு உண்டு. கீரைகள், காய்கறிகள், பழங்கள் இவ்வாறே கெடுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

வயிற்றுப்போக்கிற்கு முக்கிய காரணம் நாம் சாப்பிடும் பொருட்கள் கிருமிகளினால் பாதிக்கப்படுவது தான்.E coli சால்மனல்லா போன்ற விஷ பக்ரீரியாக்கள் கெட்டுப்போகும் உணவுகளிலேயே படிந்து அவை நம் வயிற்றை தாக்குவதால் வயிற்றுக்கடுப்பு, வயிற்று நோய் உண்டாகும். அடிக்கடி இவ்வாறு நடக்கும் பொழுது அவை வயிற்றுப் புண்ணாகவும் மாறுகின்றன.

வயிறு உப்புசம் மற்றும் வயிற்றுப் புண்கள் வராமல் தடுக்கவும் வந்த பின்னர் அவை முழு சுகம் அடையவும் உணவுப்பழக்கத்தில் மாறுதல்கள் தேவை.

உணவு மாறுதல்களை செய்யாமல் மருந்துகளும் மாத்திரைகளும் சாப்பிடுவதால் மட்டும் பலன் அளிக்காது. வயிற்றுப் பிரச்சினைகளிலிருந்து வெளியேறி முற்றும் குணமடைய வயிற்று உறுப்புகளை முதலில் அறிந்து அவற்றின் செயல்முறைகளையும் தெரிவது அவசியம்.

வாயில் போடப்படும் உணவு பற்களால் அரைக்கப்படுகிறது. உணவை பற்களினால் அரைக்காமல் அவசர அவசரமாக விழுங்கும் பொழுது அரைபடாத உணவை வயிற்றுக்குள் அனுப்புகிறோம். பற்களினால் உணவு அரைபடாவிட்டால் வேறெங்கும் உணவு அரைபடாது. அரைக்கப்படாத உணவு ஜீரணம் ஆவது கடினம்.

வயிற்றுப்பிரச்சினைகளுக்கு முதல் முக்கிய காரணம் அவசர அவசரமாக சாப்பிடுவது தான். பற்களை பயன்படுத்தி உணவை அரைப்பது முதல் முக்கிய செயல் உணவு உண்ணும் பொழுது அவசரம் வேண்டாம். நிதானம் தேவை. ஞாபகம் இருக்கட்டும் பற்கள் வாயில் மாத்திரம் தான் இருக்கிறது. வயிற்றில் இல்லை. ஆகவே உணவை பற்களினால் அரைப்பதற்கு தேவையான அளவு நேரம் ஒதுக்கவும்.

(தொடரும்...)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 176

## பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்


1945 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் நேசநாட்டுப் படைத் தலைமை இத்தாலியப் போர்முனையில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யவில்லை, ஏப்ரல் ஆரம்பத்தில்தான் நேசநாட்டுத் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. விமானப்படை இவற்றின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆதரித்தது. பிரிட்டிஷ்- அமெரிக்கத் துருப்புகள் நுழைந்த பெரும்பாலான நகரங்களும் கிராமங்களும் கெரில்லாப்படை வீரர்களாலும் கிளர்ந்தெழுந்த மக்களாலும் விடுவிக்கப்பட்டன. ஏப்ரல் 29 ஆம் திகதி இத்தாலியிலிருந்த ஜேர்மனியப் படைத் தலைமையின் பிரதிநிதிகள் நிபந்தனையற்று சரணடையும் உடன் பாட்டில் கையெழுத்திட்டனர். இது 1945 ஆம் ஆண்டுமே மாதம் 2ஆம் திகதி 12 மணிக்கு அமுலுக்கு வந்தது.

அட்லாண்டிக்கிலும் மத்திய தரைக் கடலிலும் நேசநாட்டவரின் போர் நடவடிக்கைகள் பெரும்பாலும் தமது கடல், சமுத்திரப் போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாப்பதில் அடங்கியிருந்தன. இவற்றின் வழியாகத்தான் துருப்புகளும் போர்த் தளவாடங்களும் உணவுப் பொருட்களும் போர்த் தந்திர மூலப்பொருட்களும் மேற்கு ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன. நோர்வே, ஹாலந்து கரையோரமாக இருந்த எதிரி போக்குவரத்து மார்க்கங்களை (இவற்றின் வழியாகத்தான் எதிரி நோர்வேயிலிருந்து துருப்புகளையும் இரும்புத் தாதுவையும் அனுப்பினான்) அழிப்பதும் சற்றும் குறையாத முக்கியத்துவம் வாய்ந்த கடமையாக இருந்தது. இது பெரும்பாலும் பிரிட்டிஷ் கடற்படையால் நிறைவேற்றப்பட்டது. நேச நாட்டவரிடம் பலத்த கப்பல் எதிர்ப்பு தற்காப்பு இருந்ததால் ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களால் கணிசமான வெற்றிகளை அடைய முடியவில்லை.

1942 ஆம் ஆண்டில் மூழ்கடிக்கப்பட்ட ஒவ்வொரு ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலுக்கும் சமமாக 13.6 நேசநாட்டு கப்பல்கள் அழிக்கப்பட்டன என்றால் 1945 இல் இந்த எண்ணிக்கை 0.3 ஆக இருந்தது. 1942 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் யுத்தத்தின் இறுதியில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் போர் நடவடிக்கைகளின் வல்லமை 45 மடங்கு குறைந்தது என்று இவ்விகிதம் காட்டுகிறது. எனவே, ஜேர்மனியர்களின் நேரடி யுத்தம் தன் வல்லமையை இழந்தது.

மத்திய தரைக் கடலில் ஜேர்மனிய கடற்படைச் சக்திகள் குறைவாகவே இருந்ததால் பாசிஸ்டுகளின் முக்கிய கடமை போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாப்பதாக இருந்தது. இவற்றின் வழியாகத்தான் வட இத்தாலியில் இயங்கிய துருப்புகளுக்கும் ஏஜியன் கடலின் தீவுகளிலும் கிரீட்டின் மேற்குப்பகுதியிலும் இருந்த படையிருப்பிடங்களுக்கும் சப்ளைகள் எடுத்துச் செல்லப்பட்டன. எதிரியின் கரையோர சரக்குப் போக்குவரத்துக் கப்பல்களுக்கு எதிரான போரில் நேசநாட்டினர் விமானப் படையை ஈடுபடுத்தினர். இது தன்னுடைய வெற்றிகரமான நடவடிக்கைகளால் பாசிஸ்டுகளுக்குக் கணிசமான இழப்பை ஏற்படுத்தியது. நேசநாட்டவரின் கப்பற் போக்குவரத்திற்கோ ஜேர்மனியக் கப்பல்களும் விமானப் படையும் தீவிர அபாயத்தை ஏற்படுத்தவில்லை. ஆனாலும், கண்ணிவெடி அபாயம், தனது கப்பல்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்காகக் கண்ணி வெடியகற்றும் கப்பற் படையின் கணிசமான சக்திகளை ஈடுபடுத்துமாறு நேசநாட்டினரைக் கட்டாயப் படுத்தியது. மொத்தத்தில் அட்லாண்டிக்கிலும் மத்திய தரைக் கடலிலும் பாசிச ஜேர்மனியின் கடற்படைச் சக்திகள் தோல்வியடைந்தன.

பாசிச ஜேர்மனி நிபந்தனையற்ற சரணாகதி உடன்பாட்டில் கையொப்பம் இட்டபின் அட்மிரல் தேனிட்ஸ், போர் நடவடிக்கைகளை நிறுத்தி தம்முடைய தளங்களுக்குத் திரும்புமாறு கடலிலிருந்த எல்லா நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் கட்டளையிட்டான். அந்நேரத்தில் ஜேர்மனியிடமிருந்த 407 நீர்மூழ்கிக் கப்பல்களில் 221 நீர்மூழ்கிக் கப்பல்கள் மாலுமிகளோடு மூழ்கடிக்கப்பட்டன. 30 நேச நாட்ட வரிடையே பிரித்துக் கொள்ளப்பட்டன, 156 சமரச உடன்படிக்கைக்கு ஏற்ப பின்னால் ஒழித்துக்கட்டப்பட்டன.




பெர்லின்- கெய்ஸர் வில்ஹெல்ம் தேவாலயம் நேச அணியின் விமானக் குண்டுவீச்சுக்கு இலக்கானபோது (இன்றும் நினைவாலயமாகப் பாதுகாக்கப்படுகிறது)

1945 ஆம் ஆண்டில் நேசநாட்டுத் துருப்புகள் வெளிப்படுத்திய போர்க் கலையின் சிறப்பு அம்சம் என்னவென்னில், நடவடிக்கைகளுக்குத் திட்டமிடும்போதும் தயாராகும்போதும் இந்நடவடிக்கைகளின் இரகசியத்தின் மீது கவனம் செலுத்தியதாகும். பெரும்பாலும் இரவு நேரங்களில் போர்த் தந்திர மற்றும் நடைமுறைத் தந்திர உருமாற்றத்தின் எல்லா நடவடிக்கைகளையும் பின்பற்றித்தான் ஆரம்ப வட்டங்களில் துருப்புகள் குவிக்கப்பட்டன. சாதாரணமாகத் துருப்புகளின் அணிவகுப்பு அழமானதாக இருந்தது. ஆர்மி கோர்பஸ்களின் இரண்டாவது, மூன்றாவது படை வரிசைகளின் கவச டாங்கி டிவிசன்கள் நின்றதானது, செயல்முறை ஆழத்தில் வெற்றியைப் பெருக்க இவற்றைப் பயன்படுத்த நேசநாட்டுப் படைத் தலைமைக்கு உதவியது.



சோவியத் நினைவாலயம் -மேற்கு ஜேர்மனில்

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்



எதிரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டு எரிந்து கொண்டிருக்கும் விமானம்

துருப்புகளின் தாக்குதலுக்கு முன் பலத்த பூர்வாங்க விமானப்படை, பீரங்கிப்படைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. உதாரணமாக ரூர் தொழிற்துறை பிரதேசத்தில் பாசிஸ்டுகளைச் சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் எதிரியை ஜேர்மனியின் எஞ்சிய பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் ஒரு மாதம் நீடித்தது, நேரடி விமானப் படைத் தாக்குதல் 40 நிமிடம் முதல் (இத்தாலியப் போர்முனையில்) 10 மணி வரையும் மேற்குப் போர்முனையில் 3 நாட்களும் நீடித்தது. பூர்வாங்க பீரங்கிப்படைத் தாக்குதல் 45 நிமிடம் முதல் 8 மணி நேரம் வரை நீடித்தது.

எதிரியின் தற்காப்பைப் பிளந்து செல்வது பீரங்கிப்படை, டாங்கிகள், விமானப்படையின் உதவியோடு காலாட்படை யூனிட்டுகளால் நிறைவேற்றப்பட்டது. திட்டமிட்ட தயாரிப்புடனும் திடீர் தாக்குதலை நோக்கமாகக் கொண்ட பன்முக பொருளாயத- தொழில்நுட்ப உதவியுடனும் தாக்குதலின் போக்கில் ஆறுகள் கடக்கப்பட்டன. உதாரணமாக, 21-வது படைத் தொகுதியின் துருப்புகள் ரைன் ஆற்றைக் கடந்தபோது பொய்யான கடக்கும் வழிகளை ஏற்படுத்தவும் பிரதான தாக்குதல் திசையில் துருப்புகள் மற்றும் போர்த்தளவாடங்களை நன்கு மூடி மறைக்கவும் பரவலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆற்றைக் கடப்பதற்கு வகை செய்யும் பொருட்டு தீவிர பூர்வாங்க பீரங்கிப்படை, விமானப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இவையனைத்தும் துருப்புகள் போர்க்கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவின.

ரைனை வெற்றிகரமாகக் கடக்க உதவிய வான் இறக்குப்படைத் துருப்புகளை நேசநாட்டினர் பரவலாகப் பயன்படுத்தினர். திட்டத்திற்கேற்ப, உற்சாகமாகவும் செயல் வன்மையோடும் அவை இயங்கின. மொத்தத்தில் 1945 ஆம்ஆண்டு பாசிச ஜேர்மனியத் துருப்புகளை முறியடிப்பதில் நேச நாட்டுத் துருப்புகள் தம் பங்கைச் செலுத்தின.

(தொடரும்)

# தமிழ்நாட்டு இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை, பிறப்புச்சான்றிதழ்கள்

(சென்னை)

தமிழ்நாட்டு அகதி முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை மற்றும் பிறப்புச் சான்றிதழ்க்ளை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு செல்வதனை ஊக்குவிக்கும் முகமாக இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி விழுப்புரம் முகாமிலுள்ள 34 குடும்பங்களைச் சேர்ந்த 59 குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டிற்கு பின்னதாக 4 ஆயிரத்து 33 இலங்கை அகதிகளுக்கு பிறப்பு மற்றும் குடியுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் 110 தமிழ்நாட்டு அகதி முகாம்களில் இலங்கைத் தமிழர்கள் தற்போதும் வசித்து வருகின்றனர். (அ-2)

# வேலைகள் பூர்த்தியான நிலையிலும் திறக்கப்படாத நிலையில் ஆசிரியர் விடுதி

## நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

(மல்லாவி)

கிளிநொச்சி கல்விவலயத்திற்குட்பட்ட கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக அமைக்கப்பட்ட ஆசிரியர் விடுதிகள் வேலைகள் பூர்த்தியாகி இரண்டு மாதங்களைக் கடந்தும் இன்னும் திறந்து கையளிக்கப்படாமையால் ஆசிரியர்கள் அவல நிலைக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இவ்விடுதிகள் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தரும் 20 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தங்கி நின்று 700 மாணவர்களுக்கு கல்வி போதிப்பதற்கு பெரும் உதவியாக அமையவுள்ளது.

இவ்வாசிரியர் விடுதிகள் திறக்கப்படும் போது மாலை நேரக் கற்கைகளை இங்கு தங்கிநிற்கும் ஆசிரியர்கள் மேற்கொள்வார்கள் என்றும் இதனால் தம் பிள்ளைகள் பெரிதும் பயனடைய வாய்ப்புள்ளதாகவும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

வன்னியில் ஏற்பட்ட யுத்தத்தின் போது பாதிப்படைந்த இப்பகுதி மக்களது வீடுகள், தற்காலிக கொட்டகைகளிலும் அரை நிரந்தர வீடுகளிலும் காணப்படுவதால் மாணவர்கள் வீட்டுக் கல்வியை படிக்க முடியாது அவதியுறுகின்றனர்.

எனவே உரியதரப்பினர் காலம் தாழ்த்தாது உடன் ஆசிரியர் விடுதியை திறந்து வைக்குமாறு ஆசிரியர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-15)

# வவு. வடக்கு உத்தியோகத்தர்கள் 307 பேருக்கு நிரந்தர வீட்டுத்திட்டம்

(மல்லாவி)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் 307 பேருக்கு 1/4 ஏக்கர் காணியும் வீடு கட்டுவதற்கு 5 இலட்சம் ரூபா கடன் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நெடுங்கேணி பிரதேச செயலர் எஸ். பரந்தாமன் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களில் வீடு கட்டுவதற்கு காணிக்கும் கடன் பணத்துக்கும் விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றது.

இதில் 60 புள்ளிகளுக்கு மேல்பெற்ற 307 அரச உத்தியோகத்தர்களுக்கே 1/4 ஏக்கர் காணியும் ஐந்து இலட்சம் ரூபா கடன் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தில் ஏ9 வீதியில் புளியங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் 400 மீற்றர் தூரத்தில் உள்ள பரசங்குளம் என்னும் இடத்தில் பெருங்காடுகள் அழிக்கப்பட்டு காணிகள் வழங்கப்படுகின்றது. முதற்கட்டமாக 100 பேருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வீட்டுத்திட்டத்திற்காக அடிக்கல் நாட்டும் வைபவம் இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாகவும் பயனாளிகள் காணிகள் கிடைத்ததும் எல்லைகளைச் சுற்றி வேலிகள் அமைத்து 6 மாதத்திற்குள் வீடு கட்டி முடித்து விட வேண்டும்.

அவ்வாறு 6 மாதகாலத்திற்குள் வீடுகள் கட்டி முடிக்காத பட்சத்தில் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டு அவர்களுக்குப் பதிலாக வேறு ஓர் அரச ஊழியர்களுக்கு காணிகள் வழங்கப்படும் என நெடுங்கேணி பிரதேச செயலாளர் எஸ். பரந்தாமன் தெரிவித்தார்.

வடக்கில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் நன்மை கருதியும் கடமைகளை கிரமமாக மேற்கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தும் வகையிலுமான இலவச வீடமைப்புத் திட்டத்தை அரசாங்கம் முதற்கட்டமாக் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளது.

வீடமைப்பு அதிகார சைபயின் ஏற்பாட்டில் அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியினால் வழங்கப்படும் இக்கடன் தொகைக்கு 11 வீத வட்டி அறவிடப்படுகின்றது. (அ-2-15)

# அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகிய இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத்தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராணயம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு அனைவரையும் பங்கேற்று பயன்பெறுமாறு மன்ற அமைப்பாளார் சி. கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-9)



நாட்டில் தொடரும் வரட்சி காலநிலை காரணமாக பொது மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். வாவிகள், குளங்கள், கிணறுகள் வற்றியுள்ள நிலையில் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# புதிய பௌத்த சித்தாந்த பிக்கு தாக்கப்பட்டார்

(கொழும்பு)

புதிய பௌத்த சித்தாந்த உபதேசத்துக்காக காலி மாவட்டத்தில் பத்தேகம பிரதேசத்திற்குச் சென்ற மாற்றுக் கருத்துடைய பிக்கு ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

புதிய பௌத்த சித்தாந்த உபதேசத்துக்காக சென்ற பிக்குவும் அவரது பாதுகாவலர்களும் பௌத்த பிக்குகள் தலைமையில் சென்ற பௌத்த அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

சிறி சம்தபத்ர என்று அழைக்கப்படுபவருமான பெல்லந்தோட்ட சிறிசாந்தகம் ஆச்சிரமத்தை சேர்ந்த பௌத்த பிக்குவே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

காலியில் மாற்றுச் சிந்தனை கொண்ட மற்றொரு பௌத்த நிலையம் பௌத்த அடிப்படைவாதிகளால் சில நாட்களுக்கு முன்னர் தாக்கப்பட்டதும் அதனை அகற்றுவதற்கு அரசாங்கம் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரிட்டனில் பிரஜைகளாக விரும்பும் வெளிநாட்டவருக்கான தேர்வில் மாற்றம்

பிரித்தானியப் பிரஜைகளாக விரும்பும் வெளிநாட்டினருக்காக நடத்தப்படும் லைஃப் இன்யூகே என்ற தேர்வில் மாற்றங்களைக் கொண்டுவர பிரிட்டன் திட்டமிட்டுள்ளது.

பிரிட்டனில் வாழ்வதற்குரிய நடைமுறை விடயங்களில் செலுத்தப்பட்ட கவனத்தைக் குறைத்துக்கொண்டு பிரிட்டனின் சரித்திரம் மற்றும் சாதனைகள் தொடர்பில் அதிக தகவலறிவு தேவை என்பது போன்ற மாற்றங்களை இப்பரீட்சையில் கொண்டுவர திட்டமிடப்படுகிறது.

பிரபல ஆங்கில நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியர், நெப்போலியனை போரில் வென்ற டியுக் ஆஃப் வெலிங்டன், கவிஞர் பைரன் போன்றோர் பற்றி பிரித்தானியப் பிரஜையாக விரும்பும் வெளிநாட்டினர் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

டிரஃபால்கர் உட்பட பிரிட்டனின் சரித்திரத்தில் இடம்பெற்ற முக்கிய யுத்தங்கள், பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் செய்த முக்கிய கண்டுபிடிப்புகள், கலை மற்றும் இலக்கியத்துறையில் முக்கியப் பங்களிப்பு ஆற்றியவர்கள் ஆகியோர் பற்றி இந்தப் பரீட்சையில் கேள்விகள் கேட்கப்படும்.

இந்தப் பரீட்சை 2005 ஆம் ஆண்டு தொழிற்கட்சி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இதுவரையில் இருந்து வந்த பரீட்சையில் பிரித்தானியப் பிரஜைகளுக்கு எவ்விதமான அரசாங்கச் சலுகைகள் உள்ளன. எவ்விதமான மனித உரிமைகள் உள்ளன என்பது போன்ற விடயங்களில் அதிக கேள்வி கேட்கப்பட்டன.

தற்போது வரக்கூடிய பரீட்சை எழுதுவதற்கு பிரிட்டிஷ் தேசிய கீதத்தின் முதல் அத்தியாயமும் தெரிந்திருக்க வேண்டும்.

45 நிமிடங்கள் நடக்கூடிய இந்தப் பரீட்சையை ஐக்கிய இராச்சியத்தில் தொண்ணூறு மையங்களில் எழுதலாம்.

புதிய பாடத்திட்டத்துடன் கூடிய பரீட்சை ஆயத்த புத்தகம் இன்னும் சில மாதங்களில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் முன்னாள் போராளி பங்கேற்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பில் சிறந்த துப்பாக்கி சூட்டு திறமையை கொண்டிருந்த ஒருவர் தற்போது இலங்கையின் தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

விஜயன் என்ற இந்த விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் இலங்கை இராணுவத்துக்கு எதிராக பல சண்டைகளில் ஈடுபட்டவராவார்.

புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ள விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளில் 131 பேர் இலங்கையின் தேசிய விளையாட்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் குறிபார்த்து துப்பாக்கி சுடும் பயிற்சியை பெற்று வரும் விஜயன் தாம் தற்போது துப்பாக்கி சுடுவதில் தொழில்நுட்பங்களை கற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

இதனை தவிர 12 விடுதலைப்புலிகள், கரப்பந்தாட்டம், கிரிக்கெட், கபடி, காற்பந்தாட்டம், நீச்சல் போன்ற விளையாட்டுத்துறைகளிலும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக சிங்க்வா செய்திசேவை தெரிவித்துள்ளது. (அ-2)

# மாகாணசபை தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும்

## மக்களின் மனநிலையை அறிய இதுவே வழி என்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

இலங்கையில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டு மக்களின் உண்மையான அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள வேண்டுமாயின் ஒரே தினத்தில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். சில மாகாண சபைகளில் முழு அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தல் நடத்தி வருகின்றது.

இவ்வாறு தேர்தல் நடத்துவதன் மூலம் மக்களின் உண்மையான அபிலாஷைகளை புரிந்து கொள்ள முடியாது. தற்போதைய தேர்தல்கள் மக்களின் உண்மையான அபிலாஷைகளை திரிபுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது.

ஆளும்கட்சி முழுஅதிகாரத்தையும் பயன்படுத்தி ஒரு பிரதேசத்தில் பிரசாரத்தை நடத்தி தேர்தலில் வெற்றியீட்டுவதனை சாதனையாக கருதமுடியாது.

எனவே, நாடு முழுவதிலும் ஒரேதினத்தில் மாகாண சபைத் தேர்தல் களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ-2)

# இந்திய வீட்டுத்திட்டத்தில் புறக்கணிப்பு; கல்விசாரா ஊழியர்கள் விசனம்

## கஷ்டப்பிரதேச, அதிகஷ்டபிரதேச படிகளையும் வழங்குமாறு கோரிக்கை

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழ் உள்ள வன்னிப் பாடசாலைகளில் கடமையாற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கல்விசாரா பணியாளர்கள் தமக்கு கஷ்டப் பிரதேச படியோ அல்லது இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகளோ, வீட்டுத்திட்டங்களோ கிடைப்பதில்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது உடைமைகளையும் அவயவங்களையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மீள் குடியேறிய எமக்கு மீள்குடியேற்றத்தின் போது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா பணமும் ஐ.ஓ.எம் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா பணத்தை தவிர வேறு எந்தவித உதவிகளும் கிடைக்க வில்லை.

தற்போது இந்திய அரசினால் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் வீட்டுத் திட்டத்திலும் நாம் அரச உத்தியோகத்தர் என்ற காரணத்தால் நீக்கப்பட்டுள்ளோம்.

வன்னி பாடசாலைகளில் கஷ்டப் பிரதேசம், அதிகஷ்டப் பிரதேசம் என பிரிக்கப்பட்டு அங்கு கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 2 ஆயிரத்து 500 ரூபா வரை படிகள் வழங்கப்படுகின்றன.

அதே பாடசாலையில் மாணவர் கல்விக்கும் பாடசாலைச் சொத்து காக்கும் பணிகளில் உழைக்கும் எமக்கு இவை வழங்கப்படுவதில்லை. ஆசிரியர்களை விட சம்பளத்தில் குறைவான தொகையை பெறும் எமக்கு போரின் தாக்கமும் சேர்ந்து தாக்குகின்ற போது எதுவும் செய்ய முடியாது அவலப்படுகின்றோம்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு கஷ்டப்பிரதேசப்படிகள் மற்றும் வீட்டுத் திட்ட உதவிகள் கிடைக்க உதவ வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-15)

# மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பில் விரிவுரையாளர் சங்கம் ஈடுபடும்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அனைத்து பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக கூறியுள்ளனர்.

இதன்படி நாளை புதன்கிழமை முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பள உயர்வு, சம்பள முரண்பாடு உட்பட பல்வேறு பிரச் சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தரும்படி கடந்த ஆறு மாதங்களாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை வலியுறுத்திய போதும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லையென்றும் இதன்படி நாளை முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்ததாக சங்கம் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை இதற்கு முன்னரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)



கிளி/திருவையாறு மகா வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளி/மாவட்ட செயலக தலைமைப்பணிமனை உதவி அரச அதிபர் மாணவிக்கான பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அலுவலர்களையும் படத்தில் காணலாம் (படங்கள் :- சிவநகர் செய்தியாளர்)

# பயிற்சிப்பட்டறை

இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டளைச்சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை நாளை புதன்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண பணிப்பாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாநகர ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்ளும் இப்பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாணம் மாநகரசபை மற்றும் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளின் எல்லைகளுக்கு உட்பட்ட ஆதனங்களில் காணி பிரிவிடுதல், கட்டட அமைப்பு அல்லது சேர்க்கை, உபயோக மாற்றம் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தமது சேவையை வழங்குகின்ற உத்தரவு பெற்ற நில அளவையாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பதிவுசெய்த, பதிவுசெய்ய விரும்புகின்ற படவரைஞர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவ்நாதன் கேட்டுள்ளார்.

(அ-2)

# அரசியல் தீர்வு விடயத்தில் அரசிடம் திட்டமெதுவுமில்லை

## சிவ்சங்கர் மேனனுடன் வருகை தந்த இந்திய அதிகாரி மனம் திறக்கிறார்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான திட்டங்கள் எதனையும் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்க வில்லை என்ற உணர்வுடனேயே இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் புதுடில்லி திரும்பியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து ஒரு தெளிவான முடிவை பெறமுடியாமலேயே சிவ்சங்கர் மேனன் புதுடில்லி திரும்பியுள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுடன் கடந்த வியாழக்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்திய அதிகாரி ஒருவரே புதுடில்லியில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அவர்களின் சகோதரர்களுடன் சிவ்சங்கர் மேனன் நடத்திய சந்திப்புக்களின் போது இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பிலான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து ஒரு தெளிவான கருத்தை பெற முடியவில்லை என அவர் கூறியுள்ளார்.

அத்துடன் வடமாகாண சபைத் தேர்தல் பற்றி சிவ்சங்கர் மேனனுடனான சந்திப்புக்களின் போது அவர்கள் குறிப்பிட்டுள்ள போதிலும் அத்தேர்தல் எப்போது நடத்தப்படும் என அவர்கள் குறிப்பிடவில்லை என இவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார். அவர்களின் திட்டங்கள் என்ன? அதனை எப்போது நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள் என்பது தொடர்பில் அவர்கள் தெளிவாகச் சொல்ல தயங்குகின்றார்கள். இந்நிலையில் சிவ்சங்கர் மேனினன் கொழும்பு விஜயம் பெரியளவில் வெற்றிகரமானதாக அமையவில்லை என குறிப்பிட்ட இந்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் படைத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள், வடபகுதி காணி விவகாரம் மற்றும் வடபகுதியில் படைத்தரப்பினரின் பிரசன்னத்தை குறைப்பது போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாமை தொடர்பில் புதுடில்லியின் கவலையையும் அதிருப்தியையும் சிவ்சங்கர் மேனன் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-11)

# கருத்தரங்கும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

அப்பூதி அடிகள் நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும் கலந்துரையாடலும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

அப்பூதியடிகள் நாயனார் புராணக் கட்டமைப்பு என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் செல்வ அம்பிகை நந்தகுமாரனும் அப்பூதியடிகள் நாயனார் புராணம் காட்டும் விருந்தோம்பல் பண்பு என்ற தலைப்பில் ஆசிரியர் நாக.தமிழிந்திரனும் கருத்துரைகளை வழங்குவர்.

உயர் தர மாணவர்கள் மாத்திரமன்றி ஆர்வமுள்ள அனைவரும் இந்நிகழ்வில் பங்கு பற்றிப் பயன் பெறலாம் என நிகழ்வை வழிப்படுத்தி வரும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (6-2)

# நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் திசை திருப்படுகிறது!

நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பிக்கும் போது, மாகாண சபைத்தேர்தல் திருவிழாக்கள் வந்துவிட்டன. 27 ஆம் திகதி நள்ளிரவில் கலைக்கப் பட்ட வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபை களுக்கர்ன வேட்பு மனுதாக்கல் செய்யும் காலமும் குறிக்கப்பட்டு விட்டது.

இனி என்ன? அணி சேரலிற் கான பேரம் பேசுதல் பல மட்டங் களில் நிகழும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஷபீக் ரஜாப்டீன், மாகாண சபை முதல்மைச்சர் பதவி குறித்த சரியான இணக்கப்பாடு எட்டப்படா விட்டால், முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று கூறுவதிலிருந்து இப்பேரம் பேசல் அரங்கு, களைகட்டிவிட்டதைக் காணலாம்.

தமிழ்தழ்தேசியக் கூட்டமைப் போடு இரண்டு கட்டப் பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொண் டாலும் ஆளும் தரப்போடும், ஐ.தே.க.கட்சியோடும் பேசிக் கொண் டிருக்கிறது முஸ்லிம் காங்கிரஸ்.

முதலமைச்சர் பதவி முஸ்லிம் காங்கிரஸிற்கு வேண்டும் என்கிற வகையில் ஷபீக் ரஜாப்டீன் பேசி னாலும், அதன் பொதுச் செயலா ளர் ஹசன் அலி இதுவரை எதுவித கருத்தினையும் தெரிவிக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

நாற்காலிப் பிரச்சினைகளுக்கு அப்பால், கிழக்கில், குறிப்பாக அம்பாறையில் நில ஆக்கிரமிப்பு பற்றியதான பார்வையில் அதிக கவனத்தை தமிழ் பேசும் சமூகங் கள் செலுத்த வேண்டிய தேவையும் ஏற்படுகிறது.

அமரர் தராக்கி சிவராமுடுடன் ஊடகர் இளைய அப்துல்லா மேற்கொண்ட தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக கிழக்கின் நீர், நிலவளங்கள் அபகரிக்கப்பட்டு, பெரும் பான்மை யாக வாழும் தமிழ் பேசும் சமூகங் களிற்கிடையே முரண்பாடுகள் எவ் வாறு தோற்றம் பெற்றது என்கிற விவகாரம் தெளிவுபடுத்தப்பட் டுள்ளது.

தற்போது ஒலுவில் மற்றும் தீகவாபியை மையப்படுத்தி நான்கு புதிய சிங்களப் பிரிவுகளை அம் பாறையில் உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுவதாக செய்திகள் கூறுகின்றன.

புதிதாக உருவாகும் புனிதப் பிரதேசங்கள் ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக நிலங் கள் பறிபோகும் ஆபத்து ஏற்படு வதை மூதூரிலும் காணக் கூடியதாக விருக்கிறது.

தம்புள்ளை, தெஹிவளை, காலி என்று விரிவடையும் பெருந்தேசிய இனவாத ஆதிக்கம், மூதூரில் விகாரைகள் அமைக்கும் பணி யோடு மேலும் பல்கிப் பெருகும் சாத்தியப்பாடுகள் உண்டென்பதை தமிழ் பேசும் சமூகங்கள் உணர் கின்றன.

வட,கிழக்கில் பூர்வீகமாக வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக் கிடையே முரண்பாடுகளை தோற்று விக்கும் பிரித்தாளும் தந்திரங்களை அவதானித்து அவற்றைநீக்கும் வகையில், சிவில் சமூகங்கள் தமது வேலைத் திட்டங்களை முன்னெ டுக்க வேண்டிய தேவை ஏற்படு கிறது.

படையினரின் நில ஆக்கிரமிப் பும் பல்தேசிய கம்பனிகளின் நிலச் சுவீகரிப்பும், தேசிய இனங்களுக்கி டையே வட கிழக்கு மாகாணங்களில் புதிய முரண் நிலைகளை உருவாக்கு கின்றது. இத்தகைய நில அபகரிப் புகளினால், இரண்டு சமூகங்களும் பாதிக்கப்படுகிறது. என்பதை உணர்ந்து பொதுவான் இணக்கப் பாட்டிற்கு இவர்கள் வரவேண்டிய அவசியமும் எழுகிறது.

காணி அபகரிப்பு மற்றும் மீனவர் களின் தொழில் பிரச்சினை சம்பந்த மாக உண்ணாநிலைப் போராட்ட மொன்றினை மன்னாரில் ஆரம்பிக்க விருப்பதாக நாடாளுமன்ற உறுப்பி னர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். அங்கும் இரு சமூகங்களுக்கிடையே மோதலை உருவாக்கக் கூடிய வகையில் சில சக்திகள் தொழிற்படுவதாகக் கூறப் படுகிறது.

சன்னார் பிரதேசத்தில் விரிவுபடுத் தப்படும் படை முகாம்கள், மன்னா ரின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவு



# பளிச்சிடப்போவது மாகாணசபை தேர்தல் திருவிழாக்கள்................?

படுத்தப்படுவதால், அங்கு பூர்வீக மாக வாழும் இரு சமூகங்களும் பாதிப்படையும் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

தமிழர் பகுதிகளில் விகாரைகளை அமைப்பது இனவாதத்தை தூண்டும் செயலென தேசிய பிக்குகள் முன் னணி கருத்துத் தெரிவித்தாலும் ஆட்சியாளர்கள் அதனை நிறுத்து வார்களா என்று தெரியவில்லை.

இந்த ஆறுதல் வார்த்தைகள், நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என்பதால் நில ஆக்கிரமிப்பிற்கு எதிராக மக்கள் போராடுகின்றார்கள்.

ஆயினும் கிழக்குத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதால், நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட் டங்களைக் கைவீட்டு, தேர்தலுக் கான பணிகளில் கூட்டமைப்பினர் தமது கவனத்தைச் செலுத்துவார் களென்று அரசு எடைபோடுகிறது.

***எமது நிலம் எமக்கு வேண்டும்*** என்கிற முழக்கத்தோடு எழும் போராட்டங்களை முடக்க, ஆட்சி யாளர் மேற்கொள்ளும் நகர்வுகளில், கிளிநொச்சியில் போராட்டம் நடத்து வதில் முன்னின்ற ஸ்ரீதரன் எம்.பி.யை நான்காவது மாடிக்கு அழைத்து புலனாய்வுப் பிரிவினர் மேற் கொண்ட விசாரணை முக்கியமானது.

இவருக்கு விடுதலைப்புலிக ளோடு முன்னர் தொடர்பிருந்தா வென்று ஆராய்கின்றார்களாம். நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட் டங்கள், சர்வதேச ஊடகப் பரப்பின் சந்து பொந்துகளுக்குள் நுழைய முன்னர், அதனை எவ்வாறாயினும் அடக்கிவிட வேண்டும்மென்று அரசு அவசரப்படுகிறது.

ஆகவே, ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரை வரவேற்பது, கிழக்கு மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தலை நடாத்துவது, மன்னாரில் சமூகங்களின் மத்தியில் உரசலை ஏற்படுத்துவது போன்ற விவகாரங் கள் யாவும் நில அபகரிப்புக்கு எதிராக எழும் மக்கள் எழுச்சிகளை முடக்குவதற்கான அரசின் நகர்வு களாகப் பார்க்கலாம்.

இவை தவிர நிலப்பிரச்சினை குறித்து பேசாமல், வடமாகாண சபைத் தேர்தலை அரசு ஏன் நடாத்த வில்லை என்கிற திசை திருப்பல் விவாதங்களில் ரணில் விக்கிரம சிங்க ஈடுபடுவதையும் கவனிக்க வேண்டும்.

அரசியல் தீர்வு பற்றி பேசுவ தைத் தவிர்த்து தேர்தல் களங்கள் குறித்து பெருந்தேசிய வாதக் கட்சிகள் இரண்டும் தொடர்ச்சியாக உரையாடுவதன் நோக்கம் அவர் களைப் பொறுத்தவரை, அதிகார நலன் சார்ந்த விடயமாக இருந்தா லும் பின்னணியில் வல்லரசாளர் களின் வகிபாகம் இருப்பதை மறுக்கமுடியாது.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்துவதையே ரணிலும் கூறுகின்றார்.

விடுதலைப்புலிகள் போன்று மஹிந்த அரசும் வடக்கில் தேர்தலை நடத்தவிடுகிறார்கள் இல்லை யென்று ஆதங்கப்படும் ரணில், 2004 இல் நடந்த தேர்தலை மறந்து விட்டார் போலுள்ளது.

இந்த வாரம் எதிர்க்கட்சிகளின் கூட்டணி நடத்திய ஊடகச் சந்திப் பில் பெரும்பான்மையின அரசியல் கட்சிகள் நில அபகரிப்புக் குறித்து பேசவில்லை.

வழமைபோன்று வடக்கில் நடைபெறும் போராட்டங்களில் கலந்து கொள்ளும் மனோகணே சனே இது குறித்தான விடயத்தை முன்வைத்தார்.

இவை தவிர குடிசன மதிப்பீட்டு புள்ளிவிவரங்களின் பிரகாரம், வடக்கின் சனத்தொகையோடு

**நன்றி: இணையம்**

கிழக்கின் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ சமமான அளவில் நெருங்கிவிட்டது குறிப் பிடத்தக்கது.


வடக்கில் தமிழ்த்தேசிய அரசிய லின் பிரதிநிதித்துவம், விரைவுபடுத் தப்படும் நில ஆக்கிரமிப்பாலும் குடியேற்றங்களாலும் அளவு ரீதியில் மாறுதலடையும்போல் தெரிகிறது.

அத்தோடு வடகிழக்கில் பெரும் பான்மையாக வாழும் இரண்டு சமூகங்களுக்கும் இக் குடியேற்றங் கள் பல செய்திகளைச் சொல்லப் போவதை உணரலாம். அதிகாரமற்ற மாகாண சபைகளாலும் பூர்வீக நிலங்களை காப்பாற்ற முடியாமல் போகும்நிலை ஏற்படும்.

இதனால் ஏற்படும் பாதிப்பு, தற்போது ஒரு சமூகத்தால் எதிர் கொள்ளப்பட்டாலும், இனிவரும் காலங்களில் அதன் நீட்சி அடுத்த சமூகத்தையும் முழுமையாகப் பாதிக்குமென்பதை நினைவிற் கொள்ளுதல் நன்று.

# தமிழர்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டால் ஈழம் அமைவதை யாராலும் தடுக்க முடியாது

## சிட்னி கூட்டத்தில் தமிழருவி மணியன் உரை



தேசியத்தலைவர் பிரபாகரன் போன்ற தலைவரை தமிழர்களின் வரலாற்றில் கண்டதே இல்லை. தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் ஈழம் அமைவதை யாராலும் தடுக்க முடியாது. நான் எனது வாழ்நாளில் நிச்சயமாக ஈழம் மலர்வதைக் காண்பேன் என்ற நம்பிக்கை உள்ளது என தமிழருவிமணியன் தெரிவித்துள்ளார்.

சிட்னி தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழருவி மணியன் தமிழீழம் உருவாவதற்கு தமிழர்கள் என்ன செய்யவேண்டும் என்னும் கருப்பொருளில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இனிப்பாகப் பேசினால் அதில் உண்மை இருக்காது உண்மையைப் பேசினால் அது இனிப்பாக இருக்காது. உண்மையென்னவென்றால் ஈழத் தமிழர்களாக இருந்தாலும் சரி தமிழகத் தமிழர்களாக இருந்தாலும் சரி தமிழர்கள் நாம் ஒற்றுமையாக இல்லை. தமிழர்களுக்கு ஓர் நாடு அமைய நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

ஈழத்தில் கொடுங்கோல் அரசின் ஆட்சி எம் மீது இன்று முழுமையான ஒரு வன்முறையைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்தில் வாழும் தமிழர்களால் இப்போராட்டத்தை முன்னெடுக்க முடியுமா எனக் கேட்டால், இன்றைய சூழலில் இல்லை என்பதே உண்மையான யதார்த்தம். தமிழர் பகுதிகளில் ஏழு தமிழர்களுக்கு ஒரு இராணுவம் என்ற ரீதியில் நிறுத்திவைத்துள்ளது.

இலங்கையில் மக்களுக்கு பேச்சுச் சுதந்திரம் கூட மறுக்கப்பட்டு அடக்கு முறைக்குள் வாழ்கிறார்கள்.

தமிழகத் தலைவர்களைப் பொறுத்தவரையில் தங்கள் கட்சி சார்ந்த நலன்களிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். ஈழத் தமிழ் மக்களுக்காகவே வைகோ, நெடுமாறன் போன்றவர்கள் இதய சுத்தியுடன் செயற்பட்டாலும் அவர்களின் பின்னால் மக்கள் பலம் பெரிதாக இல்லை.

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் அவர்களின் கொள்கை வகுப்பென்பது இந்திய நலன் சார்ந்திருக்குமே தவிர அது வேறு எதையும் கருத்திற்கொள்ளாது. அந்த வகையில் இந்துமா கடலில் சீனாவின் ஆதிக்கத்தை தடுத்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டும் கோட்பாட்டுடன் இலங்கை அரசின் பக்கம் நிற்குமே தவிர ஈழத் தமிழ் நலன் சார்ந்து இருக்காது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் கைகளிலேயே முள்ளிவாய்க்காலின் பின்னரான போராட்டம் முழுமையாகத் தங்கியுள்ளது. தமிழர்களின் விடுதலைப்போரில் சனல் 4 ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. அதையும் ஆதாரமாகக் கொண்டு இலங்கை அரசு நடத்தி முடித்த ஒரு இனப்படுகொலையே என்பதை கொண்டு சென்று சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்துவதோடு சர்வதேச அரசுகளின் ஆதரவை தமிழர்கள் பக்கம் திருப்ப வேண்டும்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் அரசு ஆட்சி இழப்பதற்கான சாத்தியக் கூறுகள் வலுவாக இருப்பதனாலும் இன்று உலகத்தின் கவனம் ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் கரிசனை கொண்டிருக்கிறது.

இந்தியாவில் அமைய இருக்கும் புதிய அரசாங்கத்தை ஈழத் தமிழர்களின் விடுதலைக்குத் தடைபோடாத வகையில் அவர்களது ஆதரவைப் பெற்று எமது விடுதலையைப் பெற்றெடுக்கக்கூடிய சூழ்நிலைகள் நிச்சயமாக உருவாகும் எனத் தெரிவித்தார். (அ-2)

## வடக்கில் வைத்தியர்களின் வெற்றிடங்கள் இம்மாத இறுதிக்குள் முழுமையாக்கப்படும்

### வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு


(கொழும்பு)

வடமாகாணத்தில் உள்ள வைத்தியர்களின் வெற்றிடங்கள் இம்மாத இறுதிக்குள் முழுமையாக்கப்படும் எனஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கில் வைத்தியசாலை மற்றும் மருத்துவ நிலையங்களில் மொத்தமாக 128 வைத்திய வெற்றிடங்கள் இருப்பதாகவும் பல வைத்தியர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வைத்தியர்களுக்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சபையின் சிபாரிசுக்கமைய இவ் வசதிகள் புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்களுக்கு வழங்கப்படும்.

தற்போது வடக்கில் போதியளவு வைத்திய ஆலோசகர்கள் இருப்பதாகவும் இத்திட்டத்தின் மூலம் வைத்தியசாலை மற்றும் மருத்துவ நிலையங்களுக்கு தேவையான வைத்தியர்களை முழுமைப்படுத்தி வடக்கில் மருத்துவ சேவைகளை மேலும் வலுவூட்டுவதேஇதன் முக்கிய நோக்கமாகும் என ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



நவீனமயப்படுத்தப்பட்ட நாவலப்பட்டி ஜயத்திலக்க விளையாட்டு மைதானம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

## சுதந்திரபுரம் வவுனியா ஊடான த.பே.சேவை இடைநிறுத்தம்

### பயணிகள் அவலம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் இருந்து அதிகாலை வவுனியாவுக்கு புறப்பட்டுச் செல்லும் தனியார் பேருந்துகள் தனது சேவையை கடந்த இரு நாட்களுக்கு முன் முற்றாக இடைநிறுத்தியதால் இப்பேருந்து சேவையை நம்பியிருந்த மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தால் நடத்தப்பட்ட இச்சேவை இக்கிராம மக்களின் மீள் குடியேற்றத்தின் பின் பெரும் உதவியாக அமைந்திருந்தது.

திடீர் என கடந்த இரு நாட்களுக்கு முன் மேற்படி சங்கத்தால் இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இச்சேவை இடைநிறுத்தப்பட்டதால் சுதந்திரபுரம் கிராமத்தில் இருந்து 4 மைல் தூரம் நடந்துவந்தே உடையார்கட்டுச் சந்தியில் வேறு பேருந்துகளில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதில் அதிகாலை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள், பாடசாலை செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் காலம் தாழ்த்தி செல்லவேண்டியுள்ளது.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களின் முடிச்சுகளுடன் நான்கு மைல் தூரம் நடக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே முல்லை,. கிளிநொச்சி மாவட்டங்களின் அரச அதிபர்கள் இதில் தலையிட்டு உடன் இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்து ஒன்றின் சேவை கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-15)

## எய்ட்ஸுக்கு இதுவரை ஒன்பது பேர் இறப்பு

வருடத்தின் இதுவரையான காலத்தில் எச்.ஐ.வி.எயிட்ஸ் தொற்றுக்குள்ளான 9 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.இதுவரை நாட்டில் எயிட்ஸ் தொற்றுக்குள்ளான ஆயிரத்து 350 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக எயிட்ஸ் ஒழிப்பு மற்றும் தேசிய பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் நிமல் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

ஆயினும் நாட்டில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள எயிட்ஸ் நோயாளிகளில் 3 ஆயிரத்து 500 இற்கும் அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எயிட்ஸ் தொற்றுக்குள்ளாவதை தடுப்பது தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் நாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## செங்கல்பட்டு விவகாரத்தில் தமிழக அரசு தலையிட வேண்டும்

### பிரிட்டனில் கவனயீர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசின் இனவழிப்பில் உடைமைகள் மற்றும் உறவுகளை இழந்து தமது உயிர்களை மட்டும் காவி கொண்டு தமிழகத்தில் அகதி தஞ்சம் கோரிய மக்களை பொய்யான குற்றச்சாட்டில் இந்திய அரசு செங்கல்பட்டு சிறப்பு சித்திரவதை முகாமில் அடைத்துள்ளது.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு உரிமைகளை மீட்டுத் தருவோம் என்று உறுதி கூறும் தமிழக அரசு அவ்வுரிமைகளை முதலில் தனது அரசின் கீழ் உள்ள ஈழத்தமிழர் அகதிகளுக்கு வழங்கவேண்டும்.எனவே தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அகதிகளை முகாமிலிருந்து விடுவிக்க வேண்டும் எனவும் அத்தோடு முகாமிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்குத் தகுந்த வாழ்வாதாரங்களையும் தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும்.

எனவே இன்று செவ்வாய்க்கிழமை பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் கவனயீர்ப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (அ-2)



# சிறுவர் அரங்கம்


148

## கொக்கைக் கொன்ற நண்டின் கதை

அந்தக் குளத்தில் நிறைய அளவில் மீன்கள் இருந்தன. எனவே சிறுகச்சிறுக அந்த மீன்களைத் தின்று நன்றாகச் சுகம் கண்ட கொக்கு கொஞ்சம் முதுமையடையவும் பழைய காலத்தைப் போல அவ்வளவு வேகமாக அதனால் மீன்களைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக அது ஒரு திட்டம் தீட்டியது.

அன்றிலிருந்து தன் அருகில் வந்த மீன்களைக் கூட அது பிடித்து உண்ணாமல் அமைதியாக நின்று கொண்டு இருந்தது. இவ்விதம் கொக்கு நின்று கொண்டிருக்க அதைப் பார்த்த நண்டு, உன்னருகில் வரும் மீன்களைக் கூட நீ உண்ணாமல் இவ்வளவு சோகமாக இருக்கிறாயே ஏன்? என்று கேட்டது. கொக்கு மிகவும் துயரம் நிறைந்த குரலில் பேச ஆரம்பித்தது. நண்பனே நான் இங்கு எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்து வந்தேன். இப்போது மிகவும் துயரமான நிலைமை ஏற்படப் போகிறது. இந்தக் குளத்தில் உள்ள மீன்கள் எல்லாம் இறக்கப் போகின்றன. அதை நினைத்துத் தான் வருந்துகின்றேன் என்று கூறி வேதனைப் பட்டது. இவ்விதம் கொக்குக் கூறவும் அதைக் கேட்ட நண்டு பெரிதும் அதிர்ச்சியடைந்தது. பின்னர் அவை எப்படி இறக்கப்போகின்றன என்று கேட்டது. இந்தக் குளத்தை தூர் வாரப் போகிறார்கள். ஆகவே தண்ணீரை வற்ற விட்டு மீன்கள் அனைத்தையும் பிடிக்கப்போவதாக மீனவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று பெரிதும் துயரமுடன் கூறியது. இவ்விதம் கொக்கும் நண்டும் பேசிக் கொண்டிருந்ததை அந்தக் குளத்தில் உள்ள மீன்கள் அனைத்தும் கேட்டுக் கொண்டிருந்தன. நாம் கூட்டமாக இறக்கப் போகிறோமே. இதைத் தடுக்க வழியில்லையா என்று கேட்டு வேதனைப்பட்டன. பின்னர் அந்த மீன்களில் வயதான மீன் நம்மை காப்பாற்றும் ஆற்றல் இந்தக் கொக்குக்குத் தான் உண்டு. எனவே நாம் கொக்கின் ஆலோசனையைக் கேட்டு நடப்போம் என்று கூறியது.

அதை மற்றைய மீன்களும் ஒத்துக் கொண்டன. பின்னர் எல்லா மீன்களும் கொக்கின் முன்வந்து சேர்ந்தன. நண்பரே நீங்கள் தான் எங்களை எப்படியும்



காப்பாற்ற வேண்டும். நல்ல அறிவுடையவரான நீங்கள் எப்படியும் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு என்று கூறவும் அந்தக் கொக்குக்கு உள்ளூர மகிழ்ச்சி ஏற்பட்டது. நமது திட்டம் எந்தவித பிரச்சினையும் இன்றி நிறைவேறப் போகிறது என்று எண்ணி மகிழ்ந்தது. பின்னர் அந்த மீன்களிடம் பக்குவமாக பேசியது. எப்படியும் குளத்தை வற்ற வைக்கப்போகிறார்கள். அதை ஒன்றும் தடை செய்ய முடியாது. உங்களுக்காக என்னால் ஒரு உதவி செய்ய முடியும் என்று மிகவும் அன்புடையது போல கூறியது. எப்படி செய்யப் போகிறீர்கள். எப்படியும் எங்களை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறின. அன்புள்ள நண்பர்களே இங்கிருந்து சிறிது தொலைவில் ஒரு ஏரி உள்ளது. அது மிகவும் பெரிய ஏரியானதால் அவ்வளவு சீக்கிரமாக அதன் தண்ணீர் வற்றாது. வற்ற வைக்கவும் முடியாது. பெரிய ஏரியானதால் இதைப் போல தூர் வாரவும் மாட்டார்கள். அந்த ஏரிக்கு உங்களை நான் சுமந்து செல்கிறேன். ஒவ்வொன்றாகத் தான் என்னால் கொண்டு செல்ல முடியும். இந்த உதவியை நான் கண்டிப்பாக செய்கிறேன் என்று கூறியது. இவ்விதம் கொக்குக் கூறவும் மீன்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சியடைந்தன. என்னை முதலில் தூக்கிச் செல்லுங்கள் என்று ஒவ்வொரு மீனும் கூற ஆரம்பித்தது. நான் முந்தி நீ முந்தி என்று ஒவ்வொன்றும் பரபரப்பு அடைந்தது.

ஒவ்வொரு பெரிய மீனாகத் தூக்கிக் கொண்டு சென்ற அந்தக் கொக்கு ஒரு பாறையில் வைத்து உண்ண ஆரம்பித்தது. இவ்விதமாக ஒவ்வொரு மீனையும் தூக்கிச் சென்று உண்டு மகிழ்ந்தது.

இவ்விதம் ஒரு நாளல்ல இரண்டு நாட்களல்ல இரு வாரத்திற்கு நன்றாக மீன் இறைச்சியைத் சாப்பிட்டு மகிழ்ந்தது கொக்கு.

ஒருநாள் அந்த நண்டு கொக்கிடம் பேச ஆரம்பித்தது. நண்பரே ஒரு வாரமாக மீன்களைத்தானே தூக்கிச் செல்கிறீர்கள். நண்டுகளாகிய எங்களையும் ஒருநாள் தூக்கிச் சென்றால் எங்கள் அனைவரையும் காப்பாற்றி விடலாம் என்று கூறவும் கொக்கு பெரிதும் மகிழ்ந்தது. ஒருவாரம் முழுவதும் மீன் இறைச்சியை உண்டோமல்லவா இனி இன்று ஒரு நாளாவது நண்டின் இறைச்சியை உண்டு மகிழலாம் என்று எண்ணிய கொக்கு சரி உங்களையும் யார் காப்பாற்றுவார்கள். நானே எடுத்துச் சென்று விடுகிறேன் என்று கூறியது.

நண்பனே என்னை உன் அலகால் கொத்திக் கொண்டு போக முடியாது. நான் உன்னுடைய நீண்ட கழுத்தை என் கொடுக்குகளால் பற்றிப் பிடித்துக் கொள்கிறேன். நீ பறந்து சென்று ஏரி வந்ததும் நான் என் பிடியைத் தளர்த்தி இறங்கி விடுவேன் என்றது. சரி என்று கொக்கு சம்மதம் தெரிவித்துப் பறக்க ஆரம்பித்தது.

மீன்களை வைத்துத்தின்ற பாறை வந்ததும் அந்தப் பாறையில் நிறைய மீன்களின் முள்ளைப் பார்த்துவிட்டது. அப்போதுதான் அந்தப்பொல்லாத கொக்கின் சூழ்ச்சி அந்த நண்டிற்குத் தெரிந்தது.

இதை எப்படியும் அழித்துவிட வேண்டும் என்று எண்ணிய நண்டு பாறையில் வந்து இறங்குவதற்கு முன்னாலேயே கொக்கின் கழுத்தைத் தன்னுடைய கொடுக்குகளால் இறுக்க ஆரம்பித்தது.

பாறையில் சென்று இறங்குவதற்கு முன்னால் நண்டு இவ்விதம் தன் கொடுக்குகளால் கழுத்தைப் பிடித்து இறுக்கவும் கொக்கு துடிதுடித்து இறந்தது.

கொக்கின் தலையை எடுத்துச் சென்று எஞ்சியுள்ள அப்பாவி மீன்களுக்குக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் கஷ்டப்பட்டு இழுத்துச் சென்றது அந்த நண்டு.

நமக்கு உதவி செய்த கொக்கைக் கொன்று இவ்விதம் இழுத்து வருகிறதே என்று எண்ணிய மீன்கள் ஆத்திரம் கொண்டு கத்த ஆரம்பித்தன.

கொக்கின் சூழ்ச்சியை நண்டு விளக்கமாகக் கூறவும் அதன் பின்னர்தான் அந்த மீன்கள் புரிந்து கொண்டன. தமக்கு உதவிய நண்டைப் பாராட்டி நன்றியும் தெரிவித்துக் கொண்டன.

## பஞ்ச தந்திரக் கதைகள்

# நாடளாவிய ரீதியில் ஐம்பதாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம்

## இலஞ்சம் கொடுத்து வேலைவாய்ப்பு பெறவேண்டிய தேவை பட்டதாரிகளுக்கு இல்லை என்கிறார்- டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

**நாடளாவிய ரீதியில் 50 ஆயிரம் பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர்களாக இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்திலிருந்து பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2004 ஆம் ஆண்டு இறுதியாக பட்டதாரிகள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அப்போது சுமார் 47 ஆயிரம் பேர் நாடளாவிய ரீதியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

தற்போது 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் நாடளாவிய ரீதியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பட்டதாரிகள் தமது வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தன்னம்பிக்கையுடன் வாழ வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்படுத்தி கொடுத்த வாய்ப்பாக இதை நாம் கருத வேண்டும். அதற்காக ஜனாதிபதிக்கு உங்கள் அனைவரின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்ற போது சிலரின் தவறான வழிநடத்தலினால் சில எதிர்ப்பு நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட்டிருக்கக் கூடும். இருந்தும் அரசாங்க சேவையில் மக்களுக்கு சேவை செய்ய இணைக்கப்பட்டுள்ளீர்கள்.

உலகத்தில் எந்த நாடும் பட்டதாரிகளை இவ்வளவாக இணைத்துக் கொள்வதில்லை. அத்தோடு வேறு நாட்டை சேர்ந்த பட்டதாரிகளும் அரச நியமனத்திற்காக காத்திருப்பதும் இல்லை. தனியார் துறையினையே அதிகளவில் நாடிச் செல்கின்றனர்.

இலங்கை அரசாங்கம் தமிழர்கள், சிங்களவர்கள் என்ற பாகுபாடு காட்டுவதில்லை. சுயலாப அரசியல் வாதிகள் பொய்யான பரப்புரைகளை செய்து வருகின்றனர். அவை அவர்களின் அரசியலுக்கான தவறான பரப்புரைகள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் நேர்முகத் தேர்வுக்கு தோற்றாமல் பல பட்டதாரிகள் இருக்கின்றனர். தகுதியான பட்டதாரிகள் தமது பிரதேச செயலகங்கள் ஊடாக நேர்முகத்தேர்வில் தோற்றி பட்டதாரி பயிலுநர்களாக தம்மை இணைத்துக் கொள்ள முடியும்.

அத்தோடு பட்டதாரிகள் நியமனத்திற்காக யாரிடமும் பணத்தை இலஞ்சம் கொடுத்திருந்தால் அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து பணத்தினை மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

இலஞ்சம் கொடுத்து வேலைவாய்ப்பினை பெற வேண்டிய தேவை இந்த நாட்டிலுள்ள பட்டதாரிகளுக்கு இல்லை. தமிழர்களின் உரிமை குறைக்கப்படவில்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வேறு மாவட்டங்களை விட அதிகளவு நிதி கடந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## 120 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் இதுவரை நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படாது 120 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு உள்ளதாக பதில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜீ.வி.ரவிப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலக்கண்ணிவெடி அதிகளவில் புதுக்குடியிருப்பு பகுதியில் அகற்றப்படாமல் உள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஆயிரத்து தொள்ளாயிரத்து 41 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரையில் ஆயிரத்து 821 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் நிலக்கணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இடைக்கிடையே மழை பெய்வதால் நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் தடைப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)


## சாயி நிலையத்தில் குருபூர்ணிமா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு குருபூர்ணிமா ஆன்மீக நிகழ்வு இடம்பெறும்.

இந் நிகழ்வின் போது வேத பாராயணம், காயத்திரிமந்திரம், பஜனை, தியானம் விசேட சொற்பொழிவு என்பன நடைபெறவுள்ளது.

அத்துடன் நவீன உலகில் *ஆன்மீகமும் விஞ்ஞானமும்* எனும் பொருளில் இ.அபிஷேக் விசேட சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-2)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி நகரில் 227 இலட்சம் ரூபா செலவில் றை ஆற்றுக்குளத்திற்கான பாலம் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டதை படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

# தமிழர்களுக்கு எதிரான முழுமையான போர் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## மன்னார் ஆயர் செவ்வி

தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு முழுமையான போர் தற்பொழுது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்பதை தற்போது நடைபெறும் நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன என்று அதி வணக்கத்துக்குரிய மன்னார் மறை மாவட்ட பேராயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் பிரதான தமிழ் வார பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் குறிப்பிட்டவை வருமாறு,

தமிழ் மக்கள் தாம் திறந்த வெளிச் சிறைச்சாலையில் வாழ்வதாக தெரிவித்த கருத்தடன் நூற்றுக்கு நூறு வீதம் தாமும் உடன்படுவதாக தெரிவித்த பேராயர் அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான தற்போதைய போரானது தமிழ் மக்களின் இன அடையாளத்தை அழித்து ஒழிப்பதும் அவர்களின் சுயகௌரவத்தை, பாதுகாப்பை, அரசியல் இருப்பை சிதைத்து விடும் நோக்குடனேயே இந்தப் போர் தமிழ் மக்களுக்கு எதிராக உத்தியோகப்பற்றற்ற முறையில் பிரகடனப்படுத்தப்பட்டு முன்நகர்த்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று தமிழ் மொழியையே அறியாது சிங்கள மயமாகியுள்ளதை சுட்டிக்காட்டும் பேராயர் இது போன்றதொரு நிலையை வடக்கு கிழக்கில் உருவாக்குவதற்கான திட்டங்களே முன்நகர்த்தப்படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.


இது சர்வதேச நியமங்கள், நீதி இவற்றிற்கு மாறான இனச் சுத்திகரிப்பே என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளுக்கும் இடமில்லை.

பாரம்பரியமாக வாழ்ந்து வரும் மக்களை அவர்களுடைய பிரதேசத்தில் சிறுபான்மையினராக மாற்றும் திட்டத்தை அனுமதிக்க முடியாது.

சமாதான காலத்தில் படைத்தரப்பை பலப்படுத்த வேண்டிய தேவை அதிகளவில் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. சமாதானம் வந்துவிட்டதாக கூறகின்றனர். ஆனால் சமாதானத்தை தமிழ் மக்களால் பார்க்க முடியாதிருக்கின்றது.

முள்ளிக்குளத்திலும் பேசாலை 50 வீட்டுத் திட்டத்திலுமிருந்து மக்களை படைத்தரப்பு ஏன் விரட்டியடித்தது? மக்கள் மீளக்குடியமர முடியாதுள்ளது. காடுகளிலும் கூடாரங்களிலும் எவ்வளவு காலத்துக்கு வாழ்வது? என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### தீர்த்தத் திருவிழா

### அருளாசி தந்திடுவாய்

அன்னையே அம்பிகையே
என்றென்றும் எம் துணை நிற்கும் ஈஸ்வரியே
நயினை குடிகொண்டிருக்கும் நாகேஸ்வரியே
நம்பியோரைக் கைவிடா அகிலாண்டேஸ்வரியே
என்றும் உன் அருள் ஆசி தந்திடுவாய் பூரணியே

வ.பவளகேசி
யாழ்ப்பாணம்

### தலம் காக்க

நாகம் குடைபிடிக்க நல்லோர்கள் நா வாழ்த்த
ஆகமவேதங்கள் அன்னையே புகழ்தாக
நானிலம் அமர்ந்ததாயே!
புலால் வாசம் ஓட்டுகின்ற புதுமலர் கொண்டைக்காரி
காலால் உதைத்தொருக்கால் சுடுதீமை போக்காயோ?
கையெடுத்து தலை வைத்தோம்
கன்னியுந்தன் கண் திறக்க
பையரவணிந்த எங்கள் பார்வதியே வந்திடுக நலம் காக்க

ஜெ.கந்தவேள்
கொக்குவில்

### அலைகடல் நடுவினிலே......

அலைகடலின் நடுவே மலைதொடு பக்தர் கூட்டம்
புடை சூழ கலையென இசைக்கும் வாத்தியங்கள் அரங்கேற
நயினைத் தாயிற்கு உற்சவமாம்!
மாந்தர் மனதில் பெரும் கொண்டாட்டமாம்!
வரலாறு படைத்திட்ட சக்தியாய்
குறைகள் தீர்த்த தேவியாய்
அமுது வழங்கிய அன்னையாய் திகழும்
நயினைத் தாயிற்கு உற்சவமாம்!
மாந்தர் மனதில் பெரும் கொண்டாட்டமாம்

வல்லை மு.ஆ. சுமன்

### உலகமெலாம் உன்னுள் அடைக்கலமே அம்மா

அன்னை நாகபூஷணி அம்மையே- போற்றி
ஆறுதல் அளித்து என்றும் காப்பவளே- போற்றி
இடர்களைக் களையும் இறைவியே- போற்றி
ஈசன் இடபாகம் அமர்ந்தவளே- போற்றி
உலகிலே நீ உலகநாயகியே- போற்றி
ஊர்மக்கள் போற்றும் உத்தமசீலியே- போற்றி
எண்ணங்கள் என்றும்நின் கருணையே- போற்றி
ஏற்றமுடன் வாழ வழிகாட்டுபவளே- போற்றி
ஐயங்கள் களைந்து அருள் தருபவளே- போற்றி
ஒற்றுமை உணர்வை வளர்ப்பவளே- போற்றி
ஓதுதல் என்றும் உன் திரு நாமமே- போற்றி
ஔடதமாக என்றும் எம்மை காப்பவளே- போற்றி
உலக மெல்லாம் உன்னுள் அடைக்கலமே
தாயே- போற்றி! போற்றி!!

செ.தர்மகுலசிங்கம்
நாயன்மார்கட்டு

# அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தரக்கோரி வவுனியா சுகாதார ஊழியர்கள் போராட்டம்



வவுனியா நகரசபை சுகாதார ஊழியர்கள் தமது அடிப்படை வசதிகள் கோரி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வவுனியா நகரசபைவாயிலில் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதாரத் தொழிலாளர்களுக்கு பிரத்தியேகமாக மலசலகூடம், குளியல் அறை, ஓய்வறை மற்றும் தொழில்ளாளர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டுமென்றும் சாரதிகளுக்கு தொழிலாளர் கங்காணிகளுக்கு நியமனம் வழங்கவேண்டுமென்றும் நகரசபையில் தற்காலிகமாக கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு நகரசபை தொழிலாளர்கள் பகுதியில் உள்ள வெற்றிடங்களில் அவர்களின் திறமையின் அடிப்படையில் உள்வாங்க வேண்டுமென்றும் வேறு பல கோரிக்கைகளை முன்வைத்தும் நகரசபை முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவர்கள் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் இதுவரை தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்திலேயே இப்போராட்டத்தில் குதித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவ்விடயம் குறித்து கருத்துவெளியிட்ட வவுனியா நகரசபைத் தலைவர் சுகாதாரத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாளை மறுதினம் தொழிலாளர் சங்கத்துடன் சந்திப்பை மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். (அ-266)

# வெற்றிலைக்கேணி கிராமத்திற்கு ப.நோ.கூ.ச.அமைக்கப்பட வேண்டும்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி கிராமத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று யுத்தத்திற்கு முன்னர் இயங்கி வந்தது.

ஆயினும் தற்போது அக்கிளை இயங்காமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இப்பிரதேச மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் மற்றும் ஏனைய பல்வேறு தேவைகளுக்கும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு செல்ல வேண்டுமாயின் அக்கிராமத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள கட்டைக்காடு அல்லது ஆழியவளை கிராமத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.

தற்போது இந்தக் கிராம மக்களுக்கு சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற இலவச மண்ணெண்ணெய் பெறு வதற்கு கூட மக்கள் ஆழியவளை பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைக்கு செல்ல வேண்டி யுள்ளது.

எனவே இம்மக்களின் சிரமத்தை கருத்திற்கொண்டு முன்பு இக்கிராமத்தில் இயங்கிய பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளையை மீண்டும் திறக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-64)

## நிலாமுற்றம் பகுதி-7 சிறப்பு கலந்துரையாடல்

வடமாகாணத்தில் குறைந்துசெல்லும் மக்கள் தொகையும் அதன் பாதிப்புகளும் என்ற தொனிப்பொருளில் நிலா முற்றம் பகுதி- 7 (ஏழு) சிறப்புக்கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை இல 82, பிறவுண் வீதி, (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) உள்ள நேஷன் பொப்புலர் ட்ரவல்ஸ் அன்ரூர்ஸ் இல் முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வங்கி முகாமையாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர் கள் மற்றும் பலர் கலந்து கொண்டு கருத்துரைகளை ஆற்றவுள்ளனர். (அ)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உரியர்களை தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ-3-24)

# மு.க.சு.சிவகுமாரனின் மணிவிழா நிகழ்வு இன்று

வெற்றிமணி கலாநிதி மு.க.சு. சிவகுமாரனின் மணிவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குரும்பசிட்டியில் அமைந்துள்ள யா/ பொன். பரமானந்தர் மகா வித்தியாலயத்தில் தலைவர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

விருந்தினர்களாக பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் முத்துராதாகிருஷ்ணன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளீதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசிரியுரையினை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆற்றுவார். தொடர்ந்து கலைமகன் நூல் வெளியீடு இடம்பெறும். நூலின் வெளியீட்டுரையை திருமதி ரதி சந்திரநாதன் நிகழ்த்த மதிப்பீட்டுரையை பேராசிரியர் சண்முகதாஸ் ஆற்றுவார். அத்துடன் பரிசளிப்பு நிகழ்வு, மணிவிழா நாயகன் கௌரவிப்பு என்பன இடம்பெறும். (அ-2)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எழுவர் பொலிஸாரால் கைது

பருத்தித்துறை நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 7 நபர்களை பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றினால் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நபர்களே வழக்கு தவணைக்கு சமுகமளிக்காமல் தலைமறைவாகினர்.

குறித்த நபர்கள் களவு, சண்டை, சட்டவிரோத மதுபான விற்பனை போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள்.

இதில் நெல்லியடி பொலிஸ் பிரிவில் 5 பேரும் பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் 7 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-3-24)

# அவுஸ். செல்லும் அகதிகளுக்காக கொக்கோஸ் தீவில் வசதிகள்

இலங்கை மற்றும் தென்னிந்தியா ஆகிய இடங்களில் இருந்து வரும் அகதிகளை தங்கவைப்பதற்காக அவுஸ்திரேலியாவின் பின்தங்கிய தீவான கொக்கோஸ் தீவின் வசதிகளை அதிகரிக்கும் பணிகளில் அவுஸ்திரேலிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அவுஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகள் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு பதிலாக கொக்கோஸ் தீவை நோக்கிய தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் சலவை இயந்திரங்கள் உட்பட்ட அத்தியாவசிய உபகரண தொகைகள் நேற்று முன்தினம் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கொக்கோஸ் தீவுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை கிறிஸ்மஸ்தீவில் இருந்து மேலதிகமான அகதிகளை கொக்கோஸ் தீவுக்கு மாற்றும் நடவடிக்கைகளில் சரக்கு விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. (அ-2)

பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை.
-தமிழ்ப்பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மண்டைதீவுக்கு மின்சாரம் கனவாகிவிடக் கூடாது

மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதிய உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உறுதிமொழியை யார் நம்பினாலும் மண்டைதீவு மக்கள் நம்பத் தயாரில்லை.

1990 ஆம் ஆண்டு கோட்டையைக் கைப்பற்ற வந்த படையினரின் மோசமான நடவடிக்கைகளுக்காளான மண்டைதீவு கிராமம் 1991 இல் தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது மக்கள் அற்ற ஊராக தனித்து காக்கிச் சட்டைகளின் பூமியாகியது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பிரகடனப்படுத்தலுடன் மக்களின் குடிமனைகளும் விவசாய நிலங்களும் அபகரிப்புக்குட்பட்ட போதிலும்,

குடிமனைப் பகுதிகள் விட்டுக்கொடுக்கப் பட்டாலும் விவசாய நிலங்கள் படையினரின் முகாம்களாக்கப்பட, எதுவும் பேச முடியாதவர்களாக அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் இருக்கின்றனர்.

மீள்குடியமர்வு என்று பேசிக்கொண்டாலும் மண்டைதீவில் மீள்குடியமர்வு என்பது புறக்கணிக்கப்பட்டதாக இருப்பதன் மர்மம் இன்னமும் வெளிவராத விடயமாகவே இருக்கின்றது.

எந்தவித உதவிகளும் கிடைக்கப்பெறாத நிலையில் தங்கள் மண்ணில் குடியமர்ந்த மண்டைதீவு மக்களுக்கு இன்றுவரை மின்சார வசதியோ, மருத்துவமனை வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை.

மண்டைதீவில் இருக்கக் கூடிய மருத்துவமனை சேதமடைந்து இருப்பதுடன் அதில் இராணுவம் முகாமிட்டு இருப்பது வெளியில் தெரியாத விடயமாக இருக்கலாம்.

எதுவாயினும் மண்டைதீவுக்கான மின்சாரம் என்ற விடயம் பேசப்படு பொருளாக இருக்கின்ற பொழுதும் இது தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வேலணைப் பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் மண்டைதீவுக்கான மின்சாரம் பற்றி பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் ஏதோவொரு சாட்டுக் கூறப்படுகின்றது அல்லது உறுதி மொழி வழங்கப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நடந்த வேலணை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மண்டைதீவுக்கான மின்சாரம் வழங்குதற்கு நிதி இல்லை என மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

மின்சாரம் வழங்குவதற்கு நிதி இல்லை என்று அதிகாரி கூறிய நிலையில், இப்போது வடக்கின் வசந்தத்தின் கீழ் மண்டைதீவுக்கு உயர் மின்னழுத்த இணைப்பின் மூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கின் வசந்தத் திட்டத்தின் பிரதம பொறியியலாளர் கூறியுள்ளார்.

நல்ல விடயம். வடக்கின் வசந்தத்தின் கீழ் மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு பாராட்டுக்கள்.

ஆனால் அது நடைமுறைக்கு வரவேண்டும். மண்டைதீவு மருத்துவமனை இன்னமும் சரிவராமல் மருத்துவமனை கட்டடங்களையும் நிலத்தையும் இராணுவத்துக்கு உயரதிகாரிகள் தாரைவார்த்துவிட்டார்கள் என்ற செய்திகள் பரவலாக பேசப்படும் வேளையில்,

மின்சாரம் வழங்கப்படும் என உறுதிமொழி வழங்கி ஏமாற்றாமல், அதனை நடைமுறைப் படுத்த வேண்டும். அப்போது தான் அரச நிர்வாகங்கள் மீது மக்கள் நம்பிக்கை கொள்வர்.

# சேரி வீடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான பிராந்திய மாநாடு

## அமைச்சர் விமல் வீரவன்ச பங்கேற்பு

சேரி வீடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான பிராந்திய மாநாடு ஈரானின் தெஹ்ரான் நகரில் நேற்றைய தினம் ஆரம்பமாகி நாளை புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

குறைந்த வசதிகளுடைய குடியேற்றங்கள் கொண்ட சேரி வீடுகளை கணக்கெடுப்பு மற்றும் அது தொடர்பான முறையான திட்டமொன்று தயாரிக்கும் நோக்கத்துடன் இம் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு திரட்டப்பட்ட சரியான தகவல்களை களஞ்சியப்படுத்துவதுடன் குறைந்த வசதிகளையுடைய குடியேற்றங்கள் மற்றும் சேரி வீடுகள் இனிமேலும் உருவாவதை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்தோடு சேரி வீடுகளின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை செயற்படுத்துகின்ற நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் நேற்றைய தினம் மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

சேரி வீடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான பிராந்திய மாநாட்டில் இலங்கை சார்பாக நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச கலந்துகொள்கின்றார். (அ-2)

# பயிற்சிப்பட்டறை

இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டளைச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று நாளை புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாணப் பணிப்பாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாநகர ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்ளும் இப் பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளின் எல்லைகளுக்கு உட்பட்ட ஆதனங்களில் காணி பிரிவிடுதல், கட்டிட அமைப்பு அல்லது சேர்க்கை, உபயோக மாற்றம் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தமது சேவையை வழங்குகின்ற உத்தரவு பெற்ற நில அளவையாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பதிவு செய்ய விரும்புகின்ற படவரைஞர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் கேட்டுள்ளார். (ந-8)

# உயர்தர மாணவர்களுக்கு

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென நடத்தப்படும் பரீட்சை மற்றும் கருத்தரங்கு என்பன நாளை புதன்கிழமையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் நடத்தப்படவுள்ளன.

இதற்கான நேர அட்டவணைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு பரீட்சை மற்றும் கருத்தரங்கு நடைபெறும் நிலையங்களையும், தினங்களையும் பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சை நோக்கில், இச் செயற்பாடு மிகப் பயனுள்ளதாகையால், மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தை தவறவிட வேண்டாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (ந-8)

# கரு வளர்த்த நாயகிக்கு மஹா அபிஷேகம்

இந்தியாவில் கருவளர்த்த நாயகி எனும் திருநாமம் சூட்டப்பட்ட சிலையொன்று யாழ். நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திரில் ஸ்தாபனம் செய்வதற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இதற்கான ஸ்தாபனக் கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பால்காப்பு இடம்பெறும்.

மஹா அபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து விசேட பூசை நடைபெறும். (அ-2)

# ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான 'மகிழ்ச்சியான வாழ்வு - தொடர் நூல்' கருத்தரங்கானது 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

4 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களில் ஒருவர், 5 ஆம் திகதி வியாழக்கிழமை வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் பாட ஆசிரியர், 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் ஒருவர் என்ற ஒழுங்கில் ஆசிரியர்களை இக் கருத்தரங்கிற்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ந-8)

# சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் 400 வீடுகள்

பூநகரி பிரதேச செயலகம் ஊடாக சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் 400 வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 9 கிராமங்களில் மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அரசபுரம் கிராமத்தில் 20 வீடுகளும் மணற்காடு கிராமத்தில் 33 வீடுகளும் 4 ஆம் கட்டையில் 72 வீடுகளும் நெடுங்குளம் கிராமத்தில் 29 வீடுகளும் பல்லாய் கிராமத்தில் 10 வீடுகளும் பள்ளிக்குடா கிராமத்தில் 79 வீடுகளும் செட்டியார் தரை வெளி கிராமத்தில் 71 வீடுகளும் செம்பன் குன்று கிராமத்தில் 28 வீடுகளும் தெளிகரை கிராமத்தில் 8 வீடுகளும் சேவையர் தோட்டக் கிராமத்தில் 50 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடும் தலா 5 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியானவை எனவும் மலசலகூடம் உள்ளடங்கலானதாகவும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் சட்ட விரோதமாக அனுமதிப்பத்திரம் இன்றி சிறியரக லொறியில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபருக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து யாழ். நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் ,நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதவான் மா.கணேசராசா 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இதேவேளை கே.கே.எஸ். வீதியில் உள்ள கடை ஒன்றில் நுளம்பு பெருக்கத்திற்கேற்ற வகையில் சுற்றுப்புறச் சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபருக்கு யாழ். நீதவான் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-6)

# வலிகாமம் கல்வி அலுவலகத்தில் அதிபர்கள் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட வகை-1 சி பாடசாலைகளான யா/இணுவில் இந்துக் கல்லூரி, யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கான பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் வலயக் கல்வி வலயத்தை சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனிதன்




நான் தூய்மையற்றவனாக இருந்தால் அதுவும் நான் செய்து கொண்டதுதான். இதுவே நான் விரும்பினால் தூயவனாக இருக்க முடியும் என்பதையும் காட்டுகிறது.

மனித சங்கல்பம் எல்லாச்சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது. அந்த வலிமையான, உறுதியான எல்லையற்ற சங்கல்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும் இயற்கையின் ஆற்றல் கூட, கட்டாயம் தலைவணங்கியே தீரவேண்டும், ஒடுங்கியாக வேண்டும், சேவகர்களாக வேண்டும்.

நமது தகுதிக்கு ஏற்றதையே நாம் பெறுகிறோம். உலகம் கெட்டது, நாம் நல்லவர்கள் என்று சொன்னால் அது பொய். அப்படி ஒருபோதும் இருக்கமுடியாது. அது நமக்கே நாம் சொல்லிக்கொள்ளும் ஒரு பெரும் பொய்.

கற்றுக்கொள்ளவேண்டிய முதற்பாடம் இதுவே. வெளியிலுள்ள எதையும் சபிக்காமலும் வெளியிலுள்ள ஒருவர் மீதும் பழி சுமத்தாமலும் இருக்கத் தீர்மானியுங்கள். மனிதனாகஇருங்கள். எழுந்து நில்லுங்கள். பழியை உங்கள் மீதே சுமத்தீக்கொள்ளுங்கள். எப்போதும் அதுவே உண்மை என்பதை அப்போது காண்பீர்கள். உங்களையே வசப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பயசின் முடிபு சரியே-கங்குலி





ஒலிம்பிக் டெனிஸ் போட்டியில் பங்கேற்க லியா
வித்ததை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள்
குலி வரவேற்றுள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான லண்
நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில்
டெனிஸ் போட்டியில் ஆடவர்
இரட்டையர் பிரிவில் இந்
பில் லியாண்டர் பயசுடன்
மகேஸ்பூபதி, ரோஹன்
வரும் மறுத்ததால்
ஜோடி சேர இந்திய
இதற்கு பயஸ்
பிக்கிலிருந்து
தார். இதனையடுத்து சானியா மூலம் பயசை

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட்
வர் சௌரவ் கங்குலி கூறுகையில்,

ஒலிம்பிக்கில் பங்கேற்க பயஸ் சம்
இதன் மூலம் அவர் தனது சரியான
என்றார்.


உங்களுக்கும் பயிற்சி
பிரச்சினையில் நீங்கள்
நடத்தப்பட்டிருக்
களும் வேறுபட்
ஒப்பிடுவது நியாய

ண்டர் பயஸ் சம்மதம் தெரி
அணித்தலைவர் சௌரவ் கங்
டனில்
தியா சார்
ஜோடி சேர
போபண்ணா இரு
விஷ்ணுவர்த்தனுடன்
சங்கம் வற்புறுத்தியது.
எதிர்ப்பு தெரிவித்ததுடன் ஒலிம்
விலக போவதாக மிரட்டல் விடுத்
சமாதானப்படுத்தினார்.
அணியின் முன்னாள் அணித் தலை

மதம் தெரிவித்தது மிக நல்ல செய்தி.
மனப்பாங்கை வெளிப்படுத்தியுள்ளார்

யாளர் கிரேக் சாப்பலுக்கும் இடையிலான
நடத்தப்பட்டதைப் போன்று பயஸ் இப்போது
கிறாரா என்ற கேள்விக்கு இரண்டு பிரச்சினை
டவை. எனவே அவை இரண்டையும்
மற்றது என்றார்.

# யாழ்.சென்ஜோன்ஸ் சம்பியன்



வடமாகாண் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே விளையாட்டுப்போட்டியில் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி சம்பியன் ஆகியுள்ளது. வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் 15, 17 வயது பிரிவில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி சம்பியன் ஆகியுள்ளது. இதன் பெயர் விபரம் வருமாறு,

**ஆண்கள்**

**15 வயதுக்குட்பட்டோர்**

யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், யா/ சென். பற்றிக்ஸ் கல்லூரி

**17 வயதுக்குட்பட்டோர்**

யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி, முல்லைத்தீவு மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி

**19 வயதுக்குட்பட்டோர்**

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், யா/ சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**பெண்கள் 15 வயதுக்குட்பட்டோர்**

யா/கைதடி நவீல்ட் பாடசாலை, கிளிநொச்சி மகா வித்தியாலயம்

(9-266)

# வடமாகாண விளையாட்டுப்போட்டி

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வடமாகாண கல்விவிளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச் சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார்.

# யங்ஸ்டார் சம்பியன்

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச விளையாட்டுப் போட்டியில் வவுனியா யங்ஸ்டார் விளையாட்டுக்கழகம் 5 ஆவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.


பலத்த போட்டிக்கு மத்தியில் 105 புள்ளிகளைப்பெற்று சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டுவிழாவின் போது வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் இக்கழகத்திற்கான கிண்ணத்தை வழங்கி வைத்தார். (266)




# குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்






அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் தனது 93ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இத்யராஜ் ஞாபகார்த்தமாக நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் ஆகியுள்ளது.

அணிக்கு 7பேர் 8 பந்துப்பரிமாற்றம் கொண்ட போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ், மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் இறுதிப்போட்டிக்கு தெரிவாகி மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் 40 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டினையும் இழந்தது.

41 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் 6.2 ஓவர்களில் 4 விக்கெட்டினை இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது.

இப்போட்டியில் வெற்றிபெற்ற கார்மேல் போய்ஸ் அணிக்கு 25 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தினைப்பெற்ற மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்திற்கு 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகன் விருதினை குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் அலன் போடர் பெற்றுக்கொண்டார்.

தொடர் நாயகன் விருதினை குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் சாந்தன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த பந்துவீச்சாளர் விருதினை மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தின் சிறிதரன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த துடுப்பாட்ட விருதினை குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் செல்ரன் பெற்றுக்கொண்டார்.

# ஸ்பெயின் மீண்டும் யூரோ சம்பியன்; 4 கோல் போட்டு இத்தாலியை நசுக்கியது

(கீவ்)

உலகக்கோப்பை கால்பந்து போட்டியை அடுத்து மிகவும் பிரசித்தி பெற்றது யூரோ கோப்பை கால்பந்து போட்டியாகும்.

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகள் மட்டுமே பங்குபற்றும் இந்தப் போட்டி உலகக் கோப்பையைப் போலவே 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.

16 அணிகள் பங்கேற்ற 14-வது யூரோ கிண்ண கால்பந்து போட்டி போலாந்து, உக்ரைன் நாடுகளில் கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இந்தப் போட்டியின் இறுதி போட்டி உக்ரைனில் உள்ள கீவ் நகரில் நேற்று நடைபெற்றது.

இதில் நடப்பு சம்பியனான ஸ்பெயின் - இத்தாலி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பாக தொடங்கிய ஆட்டத்தின் 14-வது நிமிடத்திலேயே ஸ்பெயின் வீரர் டேவிட் சில்வா தலையால் முட்டி கோல் அடித்தார்.





அதன் பிறகு இத்தாலி வீரர்கள் தங்கள் பங்கிற்கு கோல் அடிக்க மும்முரமாக விளையாடினாலும் அவர்கள் முயற்சி ஸ்பெயின் வீரர்களால் முறியடிக்கப்பட்டது.

ஸ்பெயின் அணியின் ஜோர்டி ஆல்பா சிறப்பாக விளையாடி 41-வது நிமிடத்தில் கோல் அடித்தார்.

இதனால் ஆட்டத்தின் முதல் பாதியிலே ஸ்பெயின் அணி 2 கோல்களுடன் முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் அடுத்த பாதியில் இத்தாலி வீரர்கள் கோல் அடிக்க விடா முயற்சி செய்தனர்.

ஆனாலும் ஸ்பெயின் வீரர்கள் அவர்களுக்கு ஈடுகொடுத்து விளையாடியதால் ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடத்திலும் அனல் பறந்தது.

ஆட்டத்தின் 83-வது நிமிடத்தில் ஸ்பெயின் நட்சத்திர வீரர் பெர்னாண்டோ ரொரஸ் கோல் அடித்தார். இதனால் வெற்றி வாய்ப்பு கிட்டத்தட்ட ஸ்பெயின் அணியிடம் வந்தது.

ரொரஸ் கோல் அடித்த சிறிது நேரத்தில் அதாவது ஆட்டத்தின் 87-வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் ஜுவான் மாத்தா கோல் அடித்தார்.

இத்தாலி வீரர்கள் கடைசி வரை போராடிய போதிலும் அவர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

இதனால் ஆட்டத்தின் முடிவில் ஸ்பெயின் அணி 4:0 என்ற கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது.

ஸ்பெயின் அணி 1964 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் யூரோ கிண்ணத்தை வென்றுள்ளது.

இந்நிலையில் தற்போதும் இத்தாலியை வீழ்த்தி மூன்றாவது முறையாக யூரோ கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

இதற்கு முன்னதாக ஜேர்மனி அணி அதிகபட்சமாக 3 முறை (1972,1980,1996) யூரோ கிண்ணத்தை வென்றிருந்தது. அதனை ஸ்பெயின் அணி சமன் செய்துள்ளது.

எந்த ஒரு அணியும் தொடர்ந்து 2 முறை ஐரோப்பிய போட்டியில் சம்பியன் பட்டம் வென்றது இல்லை. ஆனால் ஸ்பெயின் அணி 2008 ஆம் ஆண்டு மற்றும் தற்போதைய போட்டியில் வென்றதன் மூலம் அந்த சாதனையையும் படைத்துள்ளது.

2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண கால்பந்தில் 1:0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணி சம்பியனாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஸ்பெயின் வீரர் பெர்ணான்டோ ரொரஸுக்கு தங்க பாதணி விருது

யூரோ கிண்ண கால்பந்து போட்டியில் அதிக கோல் அடித்த வீரருக்கு வழங்கப்படும் தங்க பாதணி விருது பெர்னாண்டோ ரொரஸுக்கு வழங்கப்பட்டது.

இந்த யூரோவில் 2 போட்டிகளில் முதல் 11 பேர் அணியிலும் 3 போட்டிகளில் மாற்று ஆட்டக்காரராகவும் களமிறங்கிய ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ ரொரஸ் 3 கோல்களை அடித்திருந்தார்.

இதில் அயர்லாந்துக்கு எதிராக இரு கோல்களையும், நேற்றுமுன்தினம் இத்தாலி அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஒரு கோலையும் அவர் அடித்தார்.

மேலும் இறுதி ஆட்டத்தில் சக வீரர் ஜுவான் மாத்தா கோல் அடிக்கவும் அருமையாக பாஸ் செய்தார். இதையடுத்து பெர்னாண்டோ ரொரஸ் இந்த யூரோவின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டு தங்க பாதணி விருதை பெற்றார்.



இவர் களத்திலிருந்த மொத்த நேரம் 189 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.








# கொழும்பு டெஸ்ட்; மழையால் பாதிப்பு பாக்.முதல் இன்னிங்ஸ் 551 ஓட்டங்கள்

(கொழும்பு)

பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் குவித்த 6 விக்கெட் இழப்பிற்கு 551 ஓட்டங்கள் என்ற இலக்கிற்கு பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி மழையால் ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது 15 ஓவர்களின் முடிபில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இதனையடுத்து 2 ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி மைதானத்தில் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 1 விக்கெட் இழப்பிற்கு 334 ஓட்டங்களை எடுத்திருந்தது.

2-ம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் அணி சற்று தடுமாறியது. எனினும் அன்றைய நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெட் இழப்பிற்கு 488 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆரம்ப வீரர் மெஹமட் ஹபீஸ் நான்கு ஓட்டங்களில் இரட்டைச் சதத்தை தவறவிட்டு 196 ஓட்டங்களும், அசார் அலி சதம் கடந்து 157 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடங்கிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 551 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் ரங்கன ஹேரத் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனையடுத்து இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது.




ஆரம்ப வீரராக களமிறங்கிய தரங்க பரணவிதாரண ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழந்தார். மற்றொரு ஆரம்ப வீரரான டில்சான் 46 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய குமார் சங்கக்கார 22 ஓட்டங்களும் எடுத்துள்ளனர்.

மழையால் நேற்றைய ஆட்டம் தடைப்பட்டது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் இலங்கை அணி 1 விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளது.

பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் பெற்ற எண்ணிக்கையிலும் பார்க்க 481 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கைபின்னிலையிலுள்ளது.

## சுதுமலை நாவலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா

சுதுமலை நாவலர் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் (ஈஞ்சழி) நடைபெறவுள்ளது.

பாடசாலையின் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும், விசேட விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குகநேசனும் கலந்து கொள்வதுடன்,

சிறப்பு விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி திணைக்கள திட்டப் பொறியியலாளர் கு.கௌசிகன் மற்றும் மாகாண பொது நிர்வாக செயலக முகாமைத்துவ உதவியாளர் ச.திவ்யன், தாதிய உத்தியோகத்தர் சி.பவன், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ.கேம நளினி ஆகியோரும் கலந்து கொள்ளவு ள்ளனர்.

## உலகை ஏமாற்...

அமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்படும் என பசில் ராஜபக்ஷ மேனனிடம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இத் தேர்தல் தாமதம் அடைவதற்கு மீள்குடியேற்றம், கண்ணிவெடிகள், வாக்காளர் பட்டியல் போன்ற விடயங்களே காரணம் என்றும் இச்சந்திப்பின்போது சிவ்சங்கர் மேனனிடம் பசில் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

கண்ணிவெடிகள் முற்றாக அகற்றபட்ட பின்னரே வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என திட்டவட்டமாகத் தெரிவித்து வந்த அரசு, இத்தேர்தல் நடத்தப்படவுள்ள காலத்தை இந்தியாவிடம் தெரிவித்திருப்பது அரசியல் வட்டாரங்களில் பல கோணங்களில் பேசப்படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இலங்கைக்கு விஜயம் செய்திருந்தவேளை, 13-வது அரசமைப்புக்கு அப்பால் சென்று பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்குத் தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார்.

ஆனால் கிருஸ்ணா நாட்டை விட்டுச் சென்றதும் தாம் அவ்வாறு கூறவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை இந்திய எதிர்க் கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜை சந்தித்தபோதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தைக் கூறியிருந்தார்.

ஆனால் எதுவும் நடக்கவில்லை. இது போன்றுதான் வட மாகாண சபைத் தேர்தல் குறித்தான அரசின் அறிவிப்பும் இருக்கப் போகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். (ந-8;11)

## இன ரீதியில்...

மின்சார விநியோகத்தை வழங்கியுள்ளேன்.

நாட்டின் ஏனைய மாகாண மக்களைப் போலவே நான் வட மாகாண மக்களையும் கருதுகிறேன் என சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். (ந-8;11)

**வாடகைக்கு**

யாழ்/ வெலிங்டன் சந்தி, மணிக்கூட்டு வீதியில் அலுவலக பாவனைக்கு உகந்த ஒவ்வொன்றும் 700 ச.அடி விஸ்தீரணம் உடைய முதலாம் மாடி, இரண்டாம் மாடி கட்டிடம் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு.

தொடர்பு: 0776102945 (C-386)



சுத்தமான சுவையான சுகாதாரமான புறியாணி வகைகள்

யாழ்நகரில் Virounthu @ Yarl Pardy

49,51 Amman Road, Nallur, Jaffna

Tel : 021 222 6868, 0759 232 967, 0759 360 370

**அனைவருக்கும் வேலைவாய்ப்பு**

பகுதிநேர/முழுநேர

மாதம் ஒரு லட்சம் (Rs. 100000/=) வரை

Data Entry, Form Filling, Facebook, Animation, Copy pasting, Print, Photoshop, C++, Java, ....300 வேலைகள் உள்ளடக்கம்.

International Master Debit Card, வேலை விளக்கம் 100% உத்தரவாதம்.

உங்கள் சுயவிபரக்கோவையைப் பூர்த்தி செய்து (தொலைபேசி எண் தெளிவாகக் குறிப்பிடவும்) 19.07.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி: S. Jegamohan, Director, ACS, Kopay Center Kopay.

TP No: 077 3967334 (8749)

## திருத் தேரில் அன்னை...

இடம்பெற்றது.

உலகளாவிய ரீதியில் நன்கு அறியப்பட்ட நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவின் போது பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் கூடினர்.

அடியவர்களின் அரோகரா கோஷத்திற்கு மத்தியில் அம்பாள் தேரேறி திருவீதியுலா வந்தாள்.

கடந்த காலங்களை விட அடியவர்களின் எண்ணிக்கை இந்த தடவை அதிகரித்துக் காணப்பட்டது.

இதன்போது அடியார்கள் கூட்டத்தின் நடுவே திருத் தேரில் வலம் வந்த அன்னையைப் பார்க்கும்போது அலைகடல் நடுவே அசைந்துவரும் தெப்பம்போலக் காட்சி அளித்தது.

மேலும் இம்முறை தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவான அடியவர்கள் வருகை தந்திருந்தனர். ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளின் நடுவே இந்த ஆலயம் அமைந்திருப்பதனால் உற்சவ காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களிலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுவது உண்டு.

அத்தோடு யாழ்.மாவட்டம், வன்னி மாவட்டங்களில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் நேற்றுத் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர். (ந-6)

## நல்லிணக்க...

ஒத்துழைப்பை ஜப்பான் எதிர்பார்ப்பதாக ஜப்பானிய பிரதிப் பிரதமர் தெரிவித்தார்.

- கடந்த 60 வருடகாலத்தில் இலங்கையும் ஜப்பானும் கொண்டிருந்த உறவுகள் எதிர் வரும் காலத்தில் மேலும் வலுவடையும் என தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்போது ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கொய்சிரோ கேம்பாவையும் அமைச்சர் பீரிஸ் சந்தித்து பேசினார். (ந8-11)

## அரபு வங்கி...

இந்நிலையில் அபு டுபாய் இஸ்லாமிய வங்கி, அல் ஹிலால் வங்கி, மஸ்கட் வங்கியின் இஸ்லாமியப் பிரிவு, ஐக்கிய நூர் இஸ்லாமிய வங்கி ஆகிய அரபு வங்கிகளிடம் 175 மில்லியன் டொலர்களை கடனாக இலங்கை பெற்றுள்ளது.

சிறிலங்கன் ஏர்லைன்ஸ் சேவையின் விரிவாக்கத்திற்கென இக் கடன் தொகையினை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8;11)

## துன்னாலையில் முதியவர் மரணம்

(கரவெட்டி)

தேர்த் திருவிழாவின்போது அங்கப் பிரதட்சணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் துன்னாலை பகுதியில் உள்ள ஓர் ஆலயத் தேர்த் திருவிழாவின்போது இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் துன்னாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் சுந்தரலிங்கம் (வயது 61) என்று குடும்பஸ்தர் ஆவார்.

அங்கப் பிரதிட்ஷை செய்து கொண்டிருந்த வேளை மயக்கமடைந்த மேற்படி குடும்பஸ்தரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது இடையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பிரேதபரிசோதனைக்காக வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-6-24)

## அமைச்சர்...

பாதுகாப்பாக கீழிறக்கப்பட்டார்.

அதன்பின் அதிதிகள் மற்றும் பிரமுகர்கள் மேடையிலிருந்து இறங்கும்போது மேடையும் சரிந்து விழுந்தது. எனினும் இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை பிரதியமைச்சர் முரளிதரன் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். (ந-8-11)

## தாக்குதலுக்கு...

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள அதிகாரிகள் கடுமையாகத் தாக்கி கை, கால்களை முறித்துள்ளனர் என தமிழ்க் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது உறவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களையடுத்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைப் பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் ஆகியோர் கடந்த சனிக்கிழமை மதியம் அவசரமாக அநுராதபுரத்திற்கு விரைந்தனர்.

அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கைதிகள் குறித்து விசாரித்துள்ளனர். அதன்போது இங்கு கொண்டுவரப்பட்ட கைதிகள் போகம்பறை மற்றும் மஹர ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தாக்குதலினால் படுகாயமடைந்த கைதியொருவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் குறித்த தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது என வைத்திசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதனையடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த கைதியைப் பார்வையிட வேண்டும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளனர். சிறைச் சாலை ஆணையாளரின் அனுமதியில்லாமல் தம்மால் அனுமதி வழங்க முடியாது என அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (ந-8-11)

**மணல் விற்பனைக்குண்டு**

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 21,000/-

தொடர்புகளுக்கு ரமேஸ் 0722694462 (8743)

02-07.2012 - 10.07.2012 வரை

விஷேட விலைக் கழிவுடன்




முதல் தர லங்கா ரைல்ஸ், உயர் தர இறக்குமதி செய்யப்பட்ட நவீன ரக குளியலறை சாதனங்கள் மற்றும் இணைப்புக்கள் இன்னும் பல...

நாராயணா

கட்டடப் பொருட்கள் வர்த்தகர்

115, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

021 567 8157
021 222 5390

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.